Postal Reg.No. GDP-39/2017-2019

بسم اللہ الرحمن الرحیم　　نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم　　وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 36

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

15 துல்ஹஜ் 1438 ஹிஜ்ரி கமரி　7 தபூக் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

7 செப்டம்பர் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**கரம்தீன் எனக்கு தண்டனை பெற்றுத் தர வேண்டும் என்பதற்காக இராணுவ நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடர்வான். உதவி செய்கின்ற பலரும் அவனுக்கு உதவி செய்வர். இறுதியில் அவனே தண்டனைக்கு ஆளாவான். மேலும் இறைவன் அவனது தீங்கிலிருந்து எனக்கு இரட்சிப்பை வழங்குவான் என்று முன்னறிவிப்பில் என்னிடம் கூறப்பட்டிருந்தது. அவ்வாறே நிகழ்ந்தது.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**இருபத்தி நான்காவது அடையாளம்:** 30 ஜுன் 1899 -ல் எனக்கு இந்த இல்ஹாம் வந்தது. “முதலில் உணர்விழந்த நிலை; பிறகு ஆழ்ந்த மயக்கம்; பிறகு மரணம்.” அத்துடன் இந்த இல்ஹாம், கலப்பற்ற தூய உள்ளம் கொண்ட ஒரு நண்பர் தொடர்பானதாகும். அவரது மரணத்தால் நமக்கு துக்கம் ஏற்படும் என்று அது பற்றி புரிய வந்தது. நமது ஜமாஅத்தைச் சார்ந்த பல சகோதரர்களுக்கும் இந்த இல்ஹாம் கூறப்பட்டது. 30 ஜுன் 1889 -ல் இந்த இல்ஹாம் அல் ஹகம் பத்திரிகையில் எழுதப்பட்டு வெளியிடப்பட்டது. பிறகு 1899-ல் ஜுலை மாதத்தின் இறுதியில் மிகவும் கலப்பற்ற தூய உள்ளம் கொண்ட நமது நண்பரான டாக்டர் முஹம்மது போடே கான் அஸிஸ்டென்ட் சர்ஜன் அவர்கள் ஓர் அகால மரணத்தின் விளைவாக குஸீரில் காலமாகி விட்டார்கள். முதலில் அவர்கள் உணர்வற்ற நிலையில் இருந்தார்கள். பிறகு ஆழ்ந்த மயக்க நிலை அவர்களை ஆட்கொண்டது. பிறகு இந்த நிலையற்ற உலகை விட்டு விட்டு அவர்கள் சென்று விட்டார்கள். அவர்களின் மரணம் நிகழ்ந்ததற்கும் இந்த இல்ஹாம் வந்ததற்கும் இடையில் 20 அல்லது 22 நாட்களின் வித்தியாசம் மட்டுமே இருந்தது.

**இருபத்தி ஐந்தாவது அடையாளம்:** ஜிஹ்லமைச் சார்ந்த கரம்தீன் என்பவன் இராணுவ நீதிமன்றத்தில் எனக்கு எதிராக தொடர்ந்த வழக்கு பற்றிய முன்னறிவிப்பாகும். ஜிஹ்லமில் எனக்கு எதிராக அவர் அந்த வழக்கை தொடர்ந்திருந்தார். இறைவன் புறமிருந்து கூறப்பட்ட அந்த முன்னறிவிப்பின் சொற்கள் இவையாகும். رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ۔ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ இன்னும் வேறு பல இல்ஹாம்களும் வந்தன. அவற்றில் நான் குற்றமற்றவனாக விடுவிக்கப்படுவது தொடர்பான வாக்குறுதி இருந்தது. அவ்வாறே இறைவன் அந்த வழக்கிலிருந்து குற்றமற்றவனாக என்னை விடுவித்து விட்டான்.

**இருபத்தி ஆறாவது அடையாளம்:** ஜிஹ்லமைச் சார்ந்த கரம்தீன் என்பவன் இராணுவ நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், தான் குற்றமற்றவனாக விடுவிக்கப்பட்டதாகும். அது குர்தாஸ்பூரில் சந்தூலாஸ் மற்றும் ஆத்மாராம் ஆகிய நீதிபதிகளின் நீதிமன்றத்தில் எனக்கு எதிராக தொடரப்பட்ட வழக்காகும். இறுதியில் குற்றமற்றவனாக நான் விடுவிக்கப்படுவேன் என்று முன்னறிவிப்பில் கூறப்பட்டிருந்தது. அவ்வாறே நான் குற்றமற்றவனாக விடுவிக்கப்பட்டேன்.

**இருபத்தி ஏழாவது அடையாளம்:** ஜிஹ்லமைச் சார்ந்த கரம்தீன் என்பவர் தண்டனை பெறுவது தொடர்பான முன்னறிப்பிவ்பாகும். அதன் அடிப்படையில் இறுதியில் அவர் தண்டனைக்கு ஆளானார். எனது நூலான மவாஹிபுர் ரஹ்மானின் 169 -வது பக்கத்தின் 8 -வது வரியில் பாருங்கள். இந்த மூன்று முன்னறிவிப்புகளும் மிகவும் விரிவாக மவாஹிபுர் ரஹ்மானில் எழுதப்பட்டிருக்கின்றது. மவாஹிபுர் ரஹ்மான் என்ற நூல் இந்த முன்னறிவிப்பின் முடிவு பற்றி எதுவும் தெரியாமல் இருந்த அந்த சமயத்தில் எழுதப்பட்டு வெளியிடப்பட்டதாகும். மேற்கண்ட நூலில் வெளியிடப்பட்டிருந்த முன்னறிவிப்பின் சொற்றொடர் இதுவாகும்:

ومن اٰیاتی ما انبأنی العلیم الحکیم فی امر رجل لئیم ۔ وبھتانه العظیم
واوحی الیّ انه یرید ان یتخطف عرضك۔ ثم یجعل نفسه غرضك۔ واراٰنی فیه
رؤیا ثلٰث مرات۔ واراٰنی ان العدوّ اعد لذالك ثلا ثة حُماةٍ لتوھین و اعناتٍ ورئیت
کأنّی احضرت محاکمة کالماخوذین ورئیت انّ اٰخر امری نجات بفضل ربّ العٰلمین۔
ولو بعد حین۔ وبُشّرتُ انّ البلاء یرد علیٰ عدوی الکذاب المھین۔ فاشعت کلّما
رأیت والھمت قبل ظھورہ فی جریدةٍ یسمّی الحکم وفی جریدة اخری یُسمّی البدر۔
ثم قعدت کالمنتظرین۔ وما مرّ علیّ مارئیت الّا سنة فاذا ظھر قدر الله علیٰ ید عدوّ
مبین اسمه کرم الدین...... وقد ظھر بعض انبآءہ تعالیٰ من اجزاء ھٰذہ القضیة
فیظھر بقیتھا کما وعد من غیر الشّكّ والشبھة

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

## 123 -வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 123 -வது காதியான் ஆண்டு மாநாட்டை 2017 டிசம்பர் 29, 30 மற்றும் 31 (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்கள் செய்தவாறு இந்த அருளுக்குரிய மாநாட்டில் கலந்து கொள்ளும் எண்ணத்துடன் அதற்காக ஆயத்தமாகும் பணிகளை செய்ய ஆரம்பித்து விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் அல்லாஹ்வுக்காக இந்த மாநாட்டில் கலந்து கொண்டு அருள்களைப் பெறும் நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாகவும் அருளுக்குரியதாவதற்காகவும் நல்ல ஆன்மாக்கள் நேர்வழியைப் பெறுவதற்கு காரணமாக இருப்பதற்கும் சகோதரர்கள் அனைவரும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ். (தலைமையக நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாத், காதியான்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

அல்லாஹ்வின் பேரருளால் அஹ்மதிய்யா ஜமாஅத் இங்கிலாந்தின் ஆண்டு மாநாடு கடந்த வாரம் நல்ல முறையில் நடந்தது. ஆண்டு மாநாட்டின் மூன்று நாட்களிலும் நாம் அல்லாஹ்வின் அருள்களின் காட்சிகளைப் பார்த்தோம். சில நிலைமைகளின் காரணமாகவும் சிதோஷன நிலைகளின் காரணமாகவும் சிறிது கவலையும் இருந்தது. ஆனால், அல்லாஹ் முழுக்க முழுக்க தனது அருளால் நிலைமைகளின் தீய தாக்கத்திலிருந்து பாதுகாத்தான். அல்லாஹ்வின் உதவியும் அருளும் ஒவ்வொரு நொடியும் இறங்கிக் கொண்டிருந்ததை ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட ஒவ்வொருவரும் உணர்ந்தனர். எனவே, இந்த விஷயத்திற்காக நாம் அல்லாஹ்விற்கு எவ்வளவு நன்றி செலுத்தினாலும் அது குறைவேயாகும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக எப்போதும் நாம் முயற்சி செய்து கொண்டிருக்கும்போதுதான் நாம் அல்லாஹ்விற்கு உண்மையான முறையில் நன்றி செலுத்த முடியும். இந்த நன்றி செலுத்துவது என்பது பணியாளர்கள் தரப்பிலிருந்தும் இருக்க வேண்டும். இதன் மூலம் எங்கு நாம் இறைவனின் திருப்தியைப் பெறுபவர்களாக இருப்போமோ அங்கு இந்த நன்றி செலுத்துவதன் காரணமாக தமது தகுதிகளில் சிறந்த நிலையை உருவாக்குபவர்களாகவும் நாம் இருப்போம். இவ்வாறே மாநாட்டில் கலந்து கொள்பவர்களும் நன்றி செலுத்துபவர்களாக இருக்க வேண்டும். அதன் மூலம் அவர்களும் அதிகமதிகமாக அல்லாஹ்வின் அருள்களை ஈர்ப்பவர்களாக வேண்டும். அவர்களது வாழ்வில் தூய மாற்றங்கள் உருவாகிக் கொண்டே செல்ல வேண்டும். மேலும், தொண்டு செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கின்ற பணியாளர்களுக்கு ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் நன்றி செலுத்த வேண்டும். இவ்வாறு பணியாளர்கள் எல்லா வகையிலும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துபவர்களாக இருக்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு அல்லது மார்க்கத்திற்காகவும், மார்க்க அறிவைப் பெற வேண்டும் என்பதற்காகவும் வந்திருந்த விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காக சந்தர்ப்பத்தை வழங்கினான்.

உண்மையில் ஆண்டு மாநாட்டின் நோக்கங்களில் இதுவும் ஒரு நோக்கமாக இருக்கின்றது. அதாவது பரஸ்பரம் அவர்களிடையே சகோதரத்துவம் மற்றும் நன்றி தெரிவிக்கின்ற உணர்வு உருவாக வேண்டும். அது ஈடிணையற்றதாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் அருளால் இந்த அன்பு நேசம் மற்றும் சகோதரத்துவத்தின் உணர்வுகளை நாம் நம்மவர்களிடத்திலும் அந்நியர்களிடத்திலும் வெளிப்படுத்தும்போது இந்த உணர்வானது வருகின்ற ஒவ்வொரு விருந்தாளிகளிடமும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அறிவு சார்ந்த மற்றும் மார்க்க நிகழ்ச்சிகளை தவிர ஒவ்வோர் அஹ்மதியின் செயல் முன்மாதிரியானது வருகின்ற அந்நியர்களிடம் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. இதனை அவர்கள் வெளிப்படுத்திக் கூறுகின்றனர். அதாவது, இஸ்லாத்தின் உண்மையான போதனையின் முன்மாதிரியை ஆண்டு மாநாட்டில் எங்களால் பார்க்க முடிந்தது என்றும் அதனால் நாங்கள் மிகுந்த தாக்கத்திற்கு ஆளானோம் என்பதை அவர்கள் வெளிப்படுத்திக் கூறுகின்றனர்.

● பல்வேறு நாடுகளிலிருந்து ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்ற முஸ்லிம் அல்லாத விருந்தினர்களுக்கு ஏற்பட்ட தாக்கங்கள் குறித்து ஈமானும் எழுச்சியூட்டும் வகையில் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். ● ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்ற புதிதாக பைஅத் செய்தவர்களின் ஈமானுக்கு எழுச்சியூட்டக்கூடிய தாக்கங்கள் பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். ● உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியின் மூலம் ஏற்பட்டிருக்கும் அசாதாரணமான தாக்கம். ● உலக பத்திரிகைகளில் மாநாடு தொடர்பான செய்திகள் வெளி வந்தன. ● பல்வேறு நாடுகளைச் சார்ந்த பத்திரிகையாளர்கள் மாநாடு தொடர்பாக வெளிப்படுத்தியிருந்த தாக்கங்கள்.

எந்நிலையிலும் ஆண்டு மாநாட்டின் சுற்றுச் சூழலிலும் டியூட்டி கொடுப்பவர்களிடமும் ஒரு தாக்கம் இருக்கின்றது. அது நீதியை விரும்புகின்ற ஒவ்வொருவரிடமும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அல்லாஹ் டியூட்டி கொடுத்த அனைவருக்கும் அதற்கான நற்கூலியை வழங்குவானாக. இஸ்லாத்தின் இந்த அமைதியான தப்லீகின் ஒரு பகுதியாக இருக்கின்ற மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கும் இதற்கான நற்கூலியை வழங்குவானாக. நாம் குறிப்பாக பணியில் ஈடுபட்டிருந்த ஆயிரக்கணக்கான ஆண்களையும், பெண்களையும், சிறுவர்களையும், சிறுமிகளையும் நமது துஆக்களில் நினைவு கூற வேண்டும்.

பத்திரிகைகளும் ஊடகங்களும் விரிவான முறையில் மாநாடு பற்றிய செய்தியை வெளியிட்டிருக்கின்றது. ஆன்லைன் மீடியா, தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள், Social Media, M.T.A -வின் LIVE Streaming, ஆப்பிரிக்காவின் பல்வேறு நாடுகளிலுள்ள டி.வி சேனல்கள் போன்றவற்றின் மூலமாக கோடிக்கணக்கான மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியது. சில நாடுகளில் டி.வி சேனல்கள் மாநாட்டின் அனைத்து நிகழ்ச்சிகளையும் முழுமையாக ஒளிபரப்பின.

இவையெல்லாம் அல்லாஹ்வின் அருள்களாகும். நமது முயற்சிகள் இவற்றில் மிகவும் சாதாரணமானதுதான்.

இந்த வருடமும் கடந்த வருடத்தைப் போன்றே கனடாவிலிருந்து குத்தாம் வந்திருந்தனர். இவர்களும் வகாரே அமல் செய்து Windup பணிகளில் பங்கெடுத்தனர்.

மதிப்பிற்குரிய கர்னல் மிர்ஸா தாவூது அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதி லக்சியா பேகம் சாஹிபா அவர்களும், ஜமாஅத்தின் முரப்பியான மதிப்பிற்குரிய மஸ்ஊது அஹ்மது தாஹிர் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய தாரிக் மஸ்ஊது சாஹிப் அவர்களும், ஆஸ்திரேலியாவின் முன்னாள் அமீரும் மிஷனரி இன்சார்ஜுமான மதிப்பிற்குரிய ஷகீல் அஹ்மது முனீர் சாஹிப் அவர்களும் வஃபாத் ஆகிவிட்டார்கள். மர்ஹூம்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் ஆல்ட்டனிலுள்ள ஹதீகத்துல் மஹ்தி மாநாட்டுத் திடலில் 4 ஆகஸ்டு 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **ஸுஹூர்** மாதம் **4 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

அல்லாஹ்வின் பேரருளால் அஹ்மதிய்யா ஜமாஅத் இங்கிலாந்தின் ஆண்டு மாநாடு கடந்த வாரம் நல்ல முறையில் நடந்தது. ஆண்டு மாநாட்டின் மூன்று நாட்களிலும் நாம் அல்லாஹ்வின் அருள்களின் காட்சிகளைப் பார்த்தோம். சில நிலைமைகளின் காரணமாகவும் சிதோஷன நிலைகளின் காரணமாகவும் சிறிது கவலையும் இருந்தது. ஆனால், அல்லாஹ் முழுக்க முழுக்க தனது அருளால் நிலைமைகளின் தீய தாக்கத்திலிருந்து பாதுகாத்தான். அல்லாஹ்வின் உதவியும் அருளும் ஒவ்வொரு நொடியும் இறங்கிக் கொண்டிருந்ததை ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட ஒவ்வொருவரும் உணர்ந்தனர். எனவே, இந்த விஷயத்திற்காக நாம் அல்லாஹ்விற்கு எவ்வளவு நன்றி செலுத்தினாலும் அது குறைவேயாகும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக எப்போதும் நாம் முயற்சி செய்து கொண்டிருக்கும்போதுதான் நாம் அல்லாஹ்விற்கு உண்மையான முறையில் நன்றி செலுத்த முடியும். இந்த நன்றி செலுத்துவது என்பது பணியாளர்கள் தரப்பிலிருந்தும் இருக்க வேண்டும். இதன் மூலம் எங்கு நாம் இறைவனின் திருப்தியைப் பெறுபவர்களாக இருப்போமோ அங்கு இந்த நன்றி செலுத்துவதன் காரணமாக தமது தகுதிகளில் சிறந்த நிலையை உருவாக்குபவர்களாகவும் நாம் இருப்போம். இவ்வாறே மாநாட்டில் கலந்து கொள்பவர்களும் நன்றி செலுத்துபவர்களாக இருக்க வேண்டும். அதன் மூலம் அவர்களும் அதிகமதிகமாக அல்லாஹ்வின் அருள்களை ஈர்ப்பவர்களாக வேண்டும். அவர்களது வாழ்வில்

தூய மாற்றங்கள் உருவாகிக் கொண்டே செல்ல வேண்டும்.

மேலும், தொண்டு செய்வதற்காக நியமிக்கப்–பட்டிருக்கின்ற பணியாளர்களுக்கு ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் நன்றி செலுத்த வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எவர்கள் அல்லாஹ்வின் அடியார்களுக்கு நன்றி செலுத்தாமல் இருக்கின்றார்களோ அவர் அல்லாஹ்விற்கும் நன்றி செலுத்தவில்லை என்று கூறியுள்ளார்கள். இந்த வகையில் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள அனைவரும் பணி செய்தவர்களுக்கும் நன்றி செலுத்த வேண்டும். இவ்வாறு பணியாளர்கள் எல்லா வகையிலும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துபவர்களாக இருக்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு அல்லது மார்க்கத்திற்காகவும், மார்க்க அறிவைப் பெற வேண்டும் என்பதற்காகவும் வந்திருந்த விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காக சந்தர்ப்பத்தை வழங்கினான். உண்மையில் ஆண்டு மாநாட்டின் நோக்கங்களில் இதுவும் ஒரு நோக்கமாக இருக்கின்றது. அதாவது பரஸ்பரம் அவர்களிடையே சகோதரத்துவம் மற்றும் நன்றி தெரிவிக்கின்ற உணர்வு உருவாக வேண்டும். அது ஈடிணையற்றதாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் அருளால் இந்த அன்பு நேசம் மற்றும் சகோதரத்துவத்தின் உணர்வுகளை நாம் நம்மவர்களிடத்திலும் அந்நியர்களிடத்திலும் வெளிப்படுத்தும்போது இந்த உணர்வானது வருகின்ற ஒவ்வொரு விருந்தாளிகளிடமும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அறிவு சார்ந்த மற்றும் மார்க்க நிகழ்ச்சிகளை தவிர ஒவ்வோர் அஹ்மதியின் செயல் முன்மாதிரியானது வருகின்ற அந்நியர்களிடம் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. இதனை அவர்கள் வெளிப்படுத்திக் கூறுகின்றனர். அதாவது, இஸ்லாத்தின் உண்மையான போதனையின் முன்மாதிரியை ஆண்டு மாநாட்டில் எங்களால் பார்க்க முடிந்தது என்றும் அதனால் நாங்கள் மிகுந்த தாக்கத்திற்கு ஆளானோம் என்பதை அவர்கள் வெளிப்படுத்திக் கூறுகின்றனர். சிறுவர்களிலிருந்து முதியவர்கள் வரை தத்தமது வட்டத்தில் வழக்கத்திற்கு மாற்றமான கலப்பற்ற தூய உள்ளத்துடன் ஒவ்வொருவரும் தொண்டாற்றிக் கொண்டிருந்தனர். இவ்வாறே மாநாட்டில் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளிலிருந்து பலனடைந்து கொண்டிருந்தனர். இந்த செயலளவிலான முன்மாதிரியின் வெளிப்பாடு உலகவாதிக்கு மிகவும் வியக்கத்தக்க விஷயம் ஆகும். வருகை தந்த அந்நியர்களான விருந்தினர்கள் தமது தாக்கங்களை வெளிப்–படுத்தியுள்ளனர். இப்போது நான் இந்த சுற்றுச்சூழலைப் பார்த்து இவர்கள் தாக்கத்திற்கு ஆளாகியவாறு கூறியுள்ள சில கருத்துக்களை இப்போது எடுத்து கூறுவோம். இது இஸ்லாத்தின் போதனை என்றால் பிறகு இந்த போதனை உலகில் பரவ வேண்டியது அவசியமானதாகும் என்று பகிரங்கமாக அவர்கள் தமது கருத்தை வெளிப்படுத்திக் கூறியுள்ளனர்.

பெனினிலிருந்து வந்துள்ள முன்னாள் வெளி விவகாரத்துறை அமைச்சரும் நாட்டின் ஜனாதிபதியின் ஆலோசகருமான மர்யம் போனி ஜியோலோ சாஹிபா அவர்கள் கூறுகின்றார்கள்:

“எனக்கு இந்த மாநாட்டின் மூலமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தை ஆழமாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. நான் மாநாட்டின் ஏற்பாடுகளைப் பார்த்து மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். பணியாளர்களின் மாநாட்டிற்கான ஏற்பாடுகளை செய்வதன் தரம் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது. பணியாளர்களின் கலப்பற்ற தன்மையைப் பார்த்து நான் வியப்படைந்தேன். நான் மாநாட்டு ஏற்பாடுகளை எல்லா வகையிலும் ஆய்வு செய்து பார்த்தேன்.” குறைகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நோக்கத்திலும் மக்கள் மாநாட்டை பார்க்கின்றனர். இவர் கூறுகின்றார்: “இவ்வளவு பெரிய மாநாட்டில் எனக்கு எந்தக் குறையும் தென்படவில்லை. ஒவ்வொரு துறையையும் அதில் ஏதாவது குறை தென்படுகின்றதா என்ற பார்வையுடன் நான் பார்த்தேன். ஆனால் ஒவ்வொரு துறையிலும் ஏற்பாடுகள் தரமிக்க–தாகவும் உயர்ந்த நிலையிலும் இருந்தது.”

பிறகு கூறுகின்றார்கள்: நான் பணியாளர்–களைப் பார்க்கும்போது சிறுவர்களும், பெரியவர்களும், முதியவரும், இளைஞரும் ஆணும் பெண்ணும் மற்றும் சுருக்கமாகக் கூறுவதென்றால் ஒவ்வொரு மட்டத்திலுள்ள மக்களும் மற்றவர்களுக்கு சுகத்தை வழங்குவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் தனது சுகத்தை மறந்து மற்றவர்களுக்கு சுகத்தையும் வசதியையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தயாராக இருந்தனர். மற்ற விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதில் மகிழ்ச்சியை உணர்கின்ற புன்சிரிப்புள்ள இந்த முகங்களை எனது வாழ்நாளில் நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்.

இவர் கூறுகின்றார்: இந்த அழகிய நினைவுகள் எனது வாழ்வின் ஒரு பகுதியாக இருக்கும். இத்தகைய செயல்கள் எங்களது நாட்டிலும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பது எனது விருப்பமாகும். அஹ்மதிய்யா ஜமாஅத் நாம் கற்று கொள்கின்ற ஒரு அகாடமி ஆகும். இதில் ஒவ்வொரு நாட்டைச் சார்ந்த இளைஞரும் கல்வியைப் பெற முடியும்.

இவர் கூறுகின்றார்: நான் ஆன்மீகமான முறையில் பார்த்தாலும் எல்லா பக்கமும் சகோதரத்துவத்தின் ஒரு சூழலை என்னால் பார்க்க முடிந்தது. அதன் மூலம் ஆன்மீகம் அதிகரித்தது. இது எத்தகைய ஒரு சுற்றுச்சூழலாக இருந்தது என்றால் எனது வாழ்நாளில் முதன் முறையாக நான் இதை அனுபவித்துப் பார்த்தேன். ஒருவேளை புதிதாக வரக்கூடிய விருந்தினர்கள் முதன் முறையாக இத்தகைய சுற்றுச்சூழலைப் பார்த்திருப்பர்.

இவர் கூறுகின்றார்: எந்த இஸ்லாத்தை அஹ்மதிய்யத் எடுத்துக் கூறுகிறதோ அதுவே உலகிற்கு அமைதியை வழங்க முடியும். உலகத்தின் பிரச்சனைக்கான தீர்வும் இதில்தான் இருக்கின்றது.

பிறகு இவர் கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் பெண்களுக்காக நிகழ்த்திய சொற்பொழிவு அது எனது சிந்தனையில் ஆழமான சுவடுகளைப் பதித்திருக்கின்றது. ஏனைய முஸ்லிம் பிரிவினர்களின் பார்வையில் பெண்களின் தகுதி ஓர் அடிமை என்பதைத் தவிர அதிகமாக வேறு எதுவும் இல்லை. ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் பெண்களுக்காக நிகழ்த்திய தமது சொற்பொழிவில் பெண்களை ஆசிரியை என்று கூறியுள்ளார்கள். அந்த பெண்ணின் கடமைகளின் கீழ் வருகின்ற தலைமுறைகளின் தர்பிய்யத் மற்று கல்வியை அவர்கள் இதில் சேர்ந்து விட்டார்கள். அதுவே உலகத்தின் எதிர்காலமாகும். அதாவது, உலகத்தின் எதிர்காலம் பெண்களின் கைகளில்தான் இருக்கின்றது. மார்க்கத்தின் எதிர்காலமும் பெண்களின் கைகளில்தான் இருக்கின்றது. இது பெண்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் மிகப்பெரும் அந்தஸ்தாகும். இதன் மூலமே ஆரோக்கியமுள்ள ஒரு சமுதாயத்தை நிலைநாட்ட முடியும்.

பிறகு கொய்ட்டமாலாவின் தேசிய பாராளுமன்றத்தின் உறுப்பினர் இலீனா கெல்லிஸ் தமது தாக்கங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறுகின்றார்: மாநாட்டில் கலந்து கொளவது மிகவும் வியக்கத்தக்க, ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்ற ஒரு அனுபவமாகும். இஸ்லாம் மார்க்கம் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பாக எனது எண்ணங்களில் வலுவான மாற்றங்கள் உருவாயிருக்கின்றன. ஊடகங்கள் இஸ்லாம் தொடர்பாக மிகவும் தவறான பயங்கரமான எண்ணத்தை உருவாக்கி இருக்கின்றது. அதாவது இஸ்லாம் தீவிரவாதம் மற்றும் வெறுப்பின் போதனையை வழங்குகின்றது என்று அது கூறுகிறது. எனக்கு இந்த மாநாட்டில் இஸ்லாத்தின் உண்மையான அமைதி நிறைந்த போதனைகளின் செயல்வடிவத்தைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் குறிக்கோளான எல்லாரிடத்தும் அன்பு, எவரிடத்தும் இல்லை வெறுப்பு என்ற ஒரே வழியின் மூலமாகவே உலகளாவிய அமைதி, ஒருவர் மற்றவரிடம் காட்டுகின்ற அன்பு, நீதி ஆகியவற்றை நிலைநாட்ட முடியும்.

இவர் கூறுகின்றார்: பணியாளர்கள் ஆயிரக்கணக்கான விருந்தினர்களுக்கு செய்த தொண்டு வியக்கத்தக்க ஒரு காட்சியாக இருந்தது.

பிறகு பெண்களுக்கான நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு தொடர்பாக அதில் எவ்வாறு பெண்களின் அந்தஸ்து பற்றி குறிப்பிடப்பட்டிருக்–கின்றது. மேலும் தாயின் காலடியில் சுவர்க்கம் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது என்பதைப் பற்றி இவர் கூறுகின்றார்.

பிறகு கூறுகின்றார்: ஆண்களின் மாநாட்டுக் கூடாரத்தை விட அதிகமாக பெண்களின் மாநாட்டுத் திடலிலுள்ள கூடாரம் மிகவும் சுகத்தைத் தரக்கூடியதாகவும் வசதியாக இருப்பதையும் சுதந்திரமாக இருக்கக்கூடிய அளவில் இருப்பதையும் என்னால் உணர முடிந்தது. இது இஸ்லாத்தின் அழகிய போதனையின் சிறந்த உதாரணமாகும். அதாவது, இதன் மூலம் ணெ்களின் கண்ணியம், அவர்களது பாதுகாப்பு, அவர்களது முழுமையான சுதந்திரம் ஆகியவற்றிற்கான உத்திரவாதம் வழங்கப்படு–கின்றது. இப்போது நான் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த அழகிய போதனைகளின் எண்ணங்களைச் சுமந்தவாறு செல்கின்றேன் என்று இவர் கூறுகின்றார்.

கோஸ்டோரிக்காவின் தேசிய பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் செர்ஜியோ மோயா (Sergio Moya) அவர்கள் மாநாட்டில் கலந்து

கொண்டார்கள். இவர் கூறுகின்றார்: ‘‘நான் இந்த மாநாட்டின் மூலமாக இஸ்லாத்தின் புதிய படத்தைப் பார்த்தேன். பரஸ்பரம் ஒருவர் மற்றவரிடத்தில் அன்பு செலுத்துவதில் ஈடிணையற்று விளங்குகின்ற முஸ்லிம்களின் ஒரு ஜமாஅத்தை நான் பார்த்தேன். அந்த ஜமாஅத் தனது ஈமானின் செயல் வடிவத்தை எடுத்துக் காட்டுகின்றது. நான் திரும்பிச் சென்று என்னுடன் இருக்கின்ற சகோதரர்களிடமும் மாணவர்களிடமும் அஹ்மதிய்யா ஜமாஅத் தான் இஸ்லாத்தின் உண்மையான அழகான போதனைகளை தமது செயல் வடிவத்தில் எடுத்துக் காட்டுகின்றது. அது உண்மையிலேயே தனது குறிக்கோளுக்கேற்ப செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று கூறுவேன்.’’ வருகின்ற இத்தகைய மக்கள் நமது தப்லீகிற்கான வழியாகவும் ஆகி விடுகின்றனர்.

பிறகு கோஸ்டோரிக்காவின் பாராளுமன்ற உறுப்பினரின் ஆலோசகரான டெக்லஸ் மோண்டோ ரோஸோ அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘நான் ஆண்டு மாநாட்டில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவுகளை மிகவும் கவனத்துடன் கேட்டேன். உங்களது எதிரிகளை மன்னிப்பதன் மூலமாகவும் அவர்களுக்காக துஆ செய்வதன் மூலமாகவும் உள்ளம் வெறுப்பு மற்றும் காழ்ப்புணர்ச்சியிலிருந்து தூய்மையடைந்து விடுகின்றது என்ற அவர்களது போதனையைக் கேட்டு நான் மிகுந்த தாக்கத்திற்குள்ளானேன்.’’ இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு வழங்கியுள்ள போதனையாகும்.

இவர் கூறுகின்றார்: ‘‘இந்த விஷயம்தான் உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கான வழியாக இருக்க முடியும். இந்த சொற்பொழிவுகள் மூலம் ஆன்மீக ரீதியிலும் செயலளவிலும் எனக்கு மிகவும் பலன் கிடைத்தது. இஸ்லாத்தின் உண்மையான போதனைகளையும் அதன் செயல் வடிவத்தையும் மாநாட்டில் என்னால் பார்க்க முடிந்தது.’’

ஹேத்தியின் அதிபரது பிரதிநிதியான ஜோசப் பெரேரே அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்னதாக எனது உள்ளத்தில் பாதுகாப்பு தொடர்பாக இவர்கள் எப்படிப்பட்ட முஸ்லிம்கள் என்று தெரியவில்லையே என்ற பல அச்சங்கள் இருந்தன. அங்கு சென்ற எனது நிலை எவ்வாறிருக்கும் என்றெல்லாம் நான் நினைத்தேன். ஆனால், மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு எனது எல்லா வகையான சந்தேகங்களும் அகன்று விட்டன. ஒவ்வொருவரும் எளிமை மற்றும் சபிப்புத் தன்மையை வெளிப்படுத்துபவராக இருந்தனர். எல்லா பக்கமும் சகோதரத்துவத்தின் சுற்றுச்சூழல் இருந்தது.’’

அவர் கூறுகின்றார்: ‘‘நான் மார்க்கத்தைச் சார்ந்த ஒரு நபரல்ல. ஆனால், இந்த மாநாட்டில் கலந்து கொண்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களைச் சந்தித்த பிறகு உண்மையான மார்க்கம் ஒன்று இருக்கின்றது என்றால் அது இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தேயாகும் என்று எனது உள்ளம் கூறுகின்றது.’’

பிறகு புர்கினோஃபாஸோவில் மனித உரிமைக் கமிஷனின் தலைவரான ஸோக்கோமோர் (Zocomore) அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘எனக்கு ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்ட போது எனக்கு மிகவும் வியப்பு ஏற்பட்டது. நான் இந்த ஜமாஅத்தின் உறுப்பினரும் அல்ல. நான் முஸ்லிமும் அல்ல. அவ்வாறிருந்தும் கூட முஸ்லிம்களின் மாநாட்டில் கலந்த கொள்ள எனக்கு அழைப்பு தரப்பட்டிருக்கின்றது. பிறகு மாநாட்டில் கலந்து கொண்டு நான் பார்த்தது என்னவென்றால், நிற இன பாகுபாடின்றி இவர்கள் தங்கள் அன்பின் கைகளை எல்லாருக்காகவும் விரித்துள்ளனர். இந்த ஜமாஅத் எல்லாரிடத்திலும் அன்புடனும் நேசத்துடனும் நடந்து கொள்கின்றது. அனைவரையும் ஒரே விதமாக மதிக்கின்றது. எல்லாரையும் கருத்தில் கொள்கின்றது.’’

இவர் கூறுகின்றார்: ‘‘நான் பல மார்க்கத் தலைவர்களின் சொற்பொழிவுளைக் கேட்டிருக்கின்றேன். அவர்கள் பேசும்போது அவர்கள்தான் உண்மையில் இருக்கின்றனர் என்பது போன்று பேசுகின்றனர். அவர்கள் மக்களின் உணர்வுகளுடன் விளையாடுகின்றனர். ஆனால், நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவுகளைக் கவனமாகக் கேட்டேன். எல்லா சொற்பொழிவுகளின் மையக் கருத்தும் உலகில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்பதாகவே இருந்தது. இந்த போதனைகள் மூலமாகத்தான் உலகில் அமைதியை நிலைநாட்ட முடியும். இதன் மூலம் நாம் தீவிரவாதம் மற்றும் நீதியில்லாத நிலையை தோல்வியடையச் செய்ய முடியும்.’’

இவ்வாறே குரோஷியாவின் குழுவைச் சார்ந்த ஒரு பெண்மணி கேட்ரீனா சாலிக் அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘நான் முதலில் சர்ச்சில், சிஸ்டராக இருந்து வந்தேன். இப்போது உண்மையைத் தேடிக் கொண்டிருக்கின்றேன். ஆண்டு மாநாட்டின் சுற்றுச் சூழலும் இங்கு அமைக்கப்பட்டுள்ள கண்காட்சிகளும் ஜமாஅத் தொடர்பாக எனக்கு கிடைத்திருக்கின்ற ஏனைய தகவல்களும் எனது எண்ணத்திற்கு மிகவும் ஒளியூட்டின. உண்மையைத் தேடுகின்ற இந்த பயணம் விரைவாக அதன் இலக்கை அடைந்து விடும் என்று எனக்கு தோன்றுகின்றது.’’

இவர் கூறுகின்றார்: ‘‘அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவு எனது எண்ணத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இப்போது நான் எல்லா விஷயங்களையும் மிகவும் ஆழமாக ஆய்வு செய்ய ஆரம்பித்து விட்டேன்.’’

குரோஷியாவைச் சார்ந்தவர்களின் குழுவில் International Business Management –ன் ஒரு மாணவர் கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்: ‘‘மாநாட்டின் ஏற்பாடுகள் மற்றும் அங்கு காட்டப்பட்ட அன்பு, கலப்பற்ற தன்மை ஆகியவற்றால் நான் மிகவும் தாக்கத்திற்கு ஆளானேன்.’’

அவர் கூறுகின்றார்: ‘‘மாநாட்டின்போது சிறுவர்கள் எந்த அளவு அன்புடனும் கலப்பற்ற தன்மையுடனும் தண்ணீர் கொடுக்கின்ற டியூட்டியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் என்றால் அல்லது மோசமான சீதோஷன நிலையில் பார்கிங் மற்றும் டிராஃபிக்கை கட்டுப்பாட்டில் வைத்திருந்தது அல்லது துப்புறவின் தரத்தை நிலைநாட்டுவதற்கு செய்யப்பட்ட முயற்சிகள் ஆகிய விஷயங்கள் என் மீது மிகுந்த ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.’’ அவர்கள், தான் முதன் முதலாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மாநாட்டில் கலந்து கொண்டிருப்பதாகவும் அதன் நினைவுகளை முழு வாழ்நாளும் அவர்கள் நினைவில் வைத்திருப்பதாக என்று அவர் கூறுகின்றார். இப்படிப்பட்ட நபர்களுடன் அங்குள்ள ஜமாஅத் நிரந்தரமாக தொடர்பு வைக்க வேண்டும்.

குரோஷியாவிலிருந்து ஒரு தம்பதியர் கடந்த வருடம் மாநாட்டிற்கு வந்தனர். அவர்கள் முஸ்லிம்கள் ஆவர். இந்த வருடமும் அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர். என்னைச் சந்தித்தபோது அவர்கள் என்னிடம் கடந்த வருடம் பொதுவாக முஸ்லிம் என்ற நிலையில் நாங்கள் மாநாட்டில் கலந்து கொண்டோம். இந்த வருடம் நாங்கள் அஹ்மதி முஸ்லிம்கள் என்ற நிலையில் மாநாட்டில் கலந்து கொண்டிருக்கின்றோம் என்று அவர்கள் கூறினர். எனவே, மாநாட்டில் அல்லாஹ்வின் மாபெரும் அருள்கள் இருக்கின்றன. பைஅத்துகளும் நடைபெறுகின்றன.

பிலிப்பைன்ஸிலிருந்து அங்குள்ள Congress Man Salvador Bilaro Junior அவர்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அவர்கள் அங்குள்ள காங்கிரஸில் உயர் தகுதியில் உள்ளவர் ஆவார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘இது எனது கண்களைத் திறக்க வைக்கின்ற ஓர் அனுபவமாக இருந்தது. இதிலிருந்து என்னால் பலவற்றையும் கற்றுக் கொள்ள முடிந்தது. எனக்கு மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம் ஜமாஅத் சகோதரர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் மிகவும் அன்புடனும் நல்லொழுக்கத்துடனும் சந்திக்கின்றனர். ஒருவர் மற்றவருக்கு முடிந்த வரை உதவி செய்ய முயற்சி செய்கின்றனர்.’’

எனவே நமது ஜமாஅத்திற்கு அந்நியர்கள் மீது ஏற்படுகின்ற தாக்கங்களைப் பொதுவான நிலைமைகளிலும் கூட நாம் நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஒவ்வோர் அஹ்மதிக்கும் இதில் மிகப்பெரிய பொறுப்பு இருக்கின்றது. சில நாட்களுக்குக் காட்டுகின்ற செயலாக இது இருக்கக் கூடாது. மாறாக எப்போதும் இத்தகைய தாக்கத்தை நிலைநிறுத்தக்கூடிய வகையில் உங்களது செயல் இருக்க வேண்டும்.

இவர் கூறுகின்றார்: ‘‘இந்த அனுபவமானது இஸ்லாம் தொடர்பாக எனக்கு கிடைக்கும் தகவல்களை அதிகரிக்கச் செய்தது. இந்த அனுபவம் எனக்கு இதற்கு முன்னர் தெரிந்திராத இஸ்லாத்தின் அழகிய போதனையை எனக்கு அறிமுகம் செய்து வைத்தது. இஸ்லாம் தொடர்பாக ஊடகங்களிலும் பொதுவாகவும் கூறப்படுகின்ற விஷயங்களுக்கு இஸ்லாத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை என்பது இந்த மாநாட்டிற்கு வந்த பிறகே எனக்கு தெரிய வந்தது.’’

பிறகு அயர்லாந்திலிருந்து வந்திருந்த ஒரு விருந்தினரான Deren Howlett Coventry அவர்கள் National Diversity Police Office –ன் தலைவராக இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: ‘‘இது எனது முதல் ஆண்டு மாநாடாகும். மாநாட்டின் சந்தர்ப்பத்தில் எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுதிமிக்க தொண்டுணர்வு கொண்ட நல்லியல்புள்ள சகோதரர்களைச்

சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது.'' பணியாளர்களின் தொண்டுகளைப் பார்த்து மக்கள் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகின்றனர்.

அவர் கூறுகின்றார்: ''இந்த மக்கள் எல்லாரிடத்திலும் அன்பு எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்பதை வெறுமனே சொற்களால் மட்டும் கூறவில்லை. மாறாக, இந்த பணியாளர்கள் மற்றும் மாநாட்டில் கலந்து கொள்பவர்களது சுய பயன்களை எதிர்ப்பார்க்காத தன்னலமற்ற தொண்டுகளின் மூலமாக இதனை அவர்கள் பகிரங்கமாக செயல்படுத்திக் காட்டியுள்ளனர்.

இவர் கூறுகின்றார்: ''இந்த மகத்தான சந்தர்ப்பத்தை நீங்கள் எனக்கு வழங்கியமைக்–காக நான் நன்றி தெரிவிக்கின்றேன். எனக்கு இஸ்லாமிய போதனைகளைக் கவனமாக சிந்திப்பதற்கும், ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளிலிருந்து பலன் பெறுவதற்குமுள்ள சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.''

பிறகு கூறுகின்றார்: ''அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவுக்கு முன்னதாக பாடப்பட்ட கவிதையின் அழகிய தாக்கம் அதிகமாக என் மீது ஏற்பட்டது.''

பிறகு ஹாலந்திலிருந்து ஒரு விருந்தினர் Mr. Armoud Vandoom அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஆண்டு மாநாட்டின் சுற்றுச் சூழல் மிகவும் நட்புரீதியான சூழலாக இருந்தது. இந்த சிறந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் பலவற்றையும் கற்றுக் கொண்டேன். நான் மக்களுடன் நினைவில் நிற்கின்ற சந்திப்புகளை நிகழ்த்தியுள்ளேன். நல்ல சூழலில் ஒரு நேர்மறையான விஷயங்களைடக கொண்ட தூதுச்செய்தியின் நறுமணம் இருந்தது. இளைஞர்கள் திரளாக வந்து மாநாட்டில் கலந்து கொண்டது மற்றும் அவர்களது தன்னலமற்ற தொண்டுகள் குறிப்பாக என்னை மிகுந்த தாக்கத்திற்குள்ளாக்கியது. இளைஞர்கள் பணி செய்வதைப் பார்த்து எனக்கு ஒரு புதிய நம்பிக்கை உருவானது. நான் எண்ணற்ற முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களின் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கின்றேன். ஆனால், இளைஞர்கள் இந்த அளவு திரளாக வந்து கலந்து கொண்டிருக்கின்றனர் என்பது எனது முதல் அனுபவமாகும்.''

பிறகு U.K –ன் Queens Council –ன் ஒரு Senior Barister Mr. David Martin அவர்கள் கூறுகின்றார்கள்: ''நான் கூற விரும்புவதைக் கூறுவதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை. இது எனது உள்ளத்தின் குரலாகும். நான் இதுவரை இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. எவ்வளவு சிறந்த மக்களாக அவர்கள் உள்ளனர்? அந்த ஜமாஅத்தும் எவ்வளவு அழகான ஜமாஅத்தாக இருக்கின்றது? நான் எனது தாயார் தரப்பிலிருந்து பூர்வீகமாக நான் ஒரு யூதன் ஆவேன். ஆனால் நான் Church of England –ற்கும் சென்றுள்ளேன். முழுமையான உறுதியுடன் என்னால் கூற முடியும். அதாவது இந்த ஆண்டு மாநாடு போன்ற ஒரு காட்சியை நான் ஒருபோதும் கண்டதில்லை.''

அவர்கள் கூறுகின்றார்கள்: ''நீங்கள் இஸ்லாத்தின் எத்தகைய அழகிய தோற்றமாகத் திகழ்கின்றீர்கள். B.B.C தரப்பிலிருந்தும் இந்த ஜமாஅத்தின் மாநாடு பற்றி ஒரு Documentary ஏன் தயார் செய்யப்படவில்லை? என்பது எனக்கு வியப்பாக இருக்கின்றது. B.B.C –யில் உள்ளவர்கள் இப்போது இதை தயார் செய்ய முயற்சி செய்கின்றனர் என்று கேள்விப்படுகின்றோம்.''

இவர்கள் கூறுகின்றார்கள்: ''இதன்மூலம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கருத்துக்கள், கொள்கைகள் மற்றும் அஹ்மதிகளின் வாழ்க்கை முறை பற்றி நாம் மக்களுக்கு தெரிவிக்க முடியும்.''

செராலியோனிலிருந்து ஒரு விருந்தினரான அப்துல் காஃபா கார்கபோ சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: ''நான் ஆண்டு மாநாட்டின் ஏற்பாடுகளைப் பார்த்து மிகவும் தாக்கத்திற்கு ஆளானேன். நான் இங்கு வராமல் இருந்து யாராவது என்னிடம் இவ்வாறு 37 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் மூன்று நாட்கள் ஓரிடத்தில் ஒன்று கூடியுள்ளனர். அங்கு எவ்விதமான ஒழுங்கீனமும் ஏற்படவில்லை என்று கூறி இருந்தால் நான் ஒருவேளை அதை நம்பாமல் இருந்திருப்பேன். ஆனால் இவற்றையெல்லாம் சுயமே நான் எனது கண்களால் கண்டு நான் மிகவும் வியப்படைந்தேன். எவரும் புகார் கூறியதை நான் பார்க்கவில்லை. எல்லா மக்களும் மிகவும் தாழ்மையுடனும் பணிவுடனும் தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றனர்.''

அந்நியர்கள் நமது பணியாளர்களையும் தன்னார்வத் தொண்டர்களையும் பார்த்து மிகவும்


**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**

Poyampalayam, P.N. Road,

Tiruppur.

Ph: 95666 47717


## திருக்குர்ஆனிலிருந்து...

*(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)*

**ஜோதி அஸ்டின்**

மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*மேலும் (அல்லாஹ்வின் அடியார்களாகிய) அவர்கள் செலவு செய்யும்போது வீண் விரயம் செய்யவோ, கருமித்தனம் காட்டவோ செய்யாமல் அவ்விரண்டுக்கும் இடையில் நடுநிலையைக் கைக்கொள்வார்கள். (25:68)*

**லஜ்னா இமாயில்லாஹ்**

ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*உங்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் அது உங்கள் கைகள் சம்பாதித்தவற்றி(ன் விளைவி)னாலே ஆகும். அவன் (உங்கள் பாவங்களுள்) அதிகமானவற்றை மன்னிக்கிறான். (42:31)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின் –றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர் –களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....*

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.


93600 05888
78716 00664

**IBR**

Construction Materials



எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹலோபிலாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.


## திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எல்லாரும் முழுமையான கீழ்படிதலுக்குள் வந்து விடுங்கள். ஷய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். அவன் உண்மையிலேயே உங்களுக்கு (மிகவும்) பகிரங்கமான பகைவனாவான். (2:209)*

**A. சம்சுல் ஆலம்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)*

**அன்னல் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*(நிராகரிப்பவர்களிடம்) கூறுவீராக: நீங்கள் பிரார்த்தனை செய்யா விட்டால் என் இறைவன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான். நீங்கள் (இறைத் தூதை) மறுத்து விட்டதால் தண்டனை உங்களைப் பற்றிக் கொள்ளும். (25:78)*

**அன்ஸருத்தீன்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*மனிதன் நல்லதைக் கேட்பவதில் ஒருபோதும் சோர்வடைவதில்லை. ஆனால், அவனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், அவன் நம்பிக்கை இழந்து சோர்வடைந்து விடுகின்றான். (41:50)*

**S.H. வஸீம் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

தாக்கத்திற்கு ஆளாகியுள்ளனர். இவ்வாறு ஒவ்வொரு பணியாளரும் அமைதியான ஒரு தப்லீகை செய்து கொண்டிருக்கின்றார். சிறுவர், சிறுமியர், ஆண், பெண், இளைஞர் என்று அனைவருமே இவ்வாறு அமைதியான தப்லீகை செய்து வருகின்றனர். இது அந்நியர்களின் சில தாக்கங்களாகும். சில முஸ்லிம்களும் மாநாட்டில் கலந்து கொண்டனர். அரசாங்கத்தின் தலைவர்கள் அரசின் பிரதிநிதிகளாக கலந்து கொண்டனர். அவர்களில் சிலரது தாக்கங்களை இப்போது நான் எடுத்துக் கூறுகின்றேன்.

அல்ஹாஜ் முஹம்மது சலீம் சாஹிப் அவர்கள் கினிகனாகொரியின் National Assembly –ன் Vice President ஆவார்கள். இவரும் Deputy Speaker –ம் ஆவார். இவர் கூறுகின்றார்: ''மாநாட்டின் ஏற்பாடுகளையும் ஒழுங்குமுறையையும் பார்த்து நாங்கள் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகி இருக்கின்றோம். நாங்கள் தேடிப் பார்த்த பிறகும் கூட எந்தவொரு துறையிலும் எந்தவொரு குறையையும் பார்க்க முடியவில்லை. மிகப்பெரிய அளவில் ஏற்பாடுகளும் அதிகமான எண்ணிக்கையில் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மக்கள் வந்திருந்தும் கூட எந்தவொரு ஒழுங்கீனமும் ஏற்படவில்லை. எவ்வித சண்டை சச்சரவுகளும் இருக்கவில்லை. எனக்கு ஹஜ் செய்வதற்கான வாய்ப்பும் கிடைத்தது. பல்வேறு இஸ்லாமிய நாடுகளில் மார்க்க நிகழ்ச்சிகளிலும் நான் கலந்து கொண்டிருக்கின்றேன். ஆனால் இவ்வளவு சிறந்த புகழ்வதற்கு தகுதியுள்ள ஏற்பாடுகளை வேறு எங்கும் நான் கண்டதில்லை. இதுவே இஸ்லாத்தின் உண்மையான ஆன்மாவாகும். அதை இங்கு பார்ப்பதற்கான வாய்ப்பு நமக்கு கிடைத்திருக்கின்றது.''

பிறகு கூறுகின்றார்: ''சின்னஞ்சிறு சிறுவர்களின் தர்பிய்யத்தும் கூட வழக்கத்திற்கு மாற்றமாக சிறப்பாக இருக்கின்றது. ஏதாவது பொருளின் தேவை உங்களுக்கு இருக்கிறதா? என்று சிறுவர்கள் கேட்கின்றனர். நாம் விரும்புவதை அவர்கள் நமக்கு தருகின்றனர். புன்சிரிப்புள்ள முகங்களுடன் அவர்கள் நம்மை சந்திக்கின்றனர். ஒருமுறை மட்டுமல்ல. மாறாக பலமுறை இவ்வாறு அவர்கள் நம்மிடம் கேட்கின்றனர். இங்கு பல்வேறு நாடுகளிலிருந்து மக்கள் வாழ்ந்திருந்தனர். அவர்களில் ஒருவர் மற்றவருடன் உடன்பிறந்த சகோதரர் போன்றும் அவர்களில் ஒருவர் மற்றவரது உறவினர் போன்றும் சந்திக்கின்றனர். இம்மக்கள் தமது பணியில் எல்லாரை விடவும் முன்னே இருக்கின்றனர். சுயமே அவர்கள்தான் சரியான வழியில் இருக்கின்றனர். உங்களுக்குப் பின்னால் இறைவனின் கை இருக்கின்றது என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.''

இவ்வாறெல்லாம் கூறிய பிறகும் கூட சிலர் ஜமாஅத்தில் இணைவதில்லை. சில உலகக் காரணங்கள் அவர்களுக்கு தடையாக இருக்கின்றது.

இவர்கள் கூறுகின்றார்கள்: ''நாங்கள் எங்களது நாட்டிற்கு திரும்பிச் சென்று அரசாங்கத்திற்கு இதன் பக்கம் கண்டிப்பாக கவனமூட்டுவோம் – இன்ஷா அல்லாஹ். அதாவது அது ஒவ்வொரு விவகாரத்திலும் ஜமாஅத்திற்கு உதவி செய்ய வேண்டும். அதன் மூலம் உங்களது ஜமாஅத் எங்கள் நாட்டிலும் சரியான இஸ்லாமிய போதனைகளின் பக்கம் எங்களுக்கு வழிகாட்ட இயலும்.''

பிறகு கினிகனாகிரியைச் சார்ந்த National Police Director ஆன ஹஸன் கிட்டா அவர்கள் கூறுகின்றார்கள்: ''எனது துறை போலீஸுடன் தொடர்புடைய ஒரு துறையாகும். எனவே நான் பாதுகாப்பு தொடர்பாக குறிப்பாக ஆய்வு செய்தேன். பாதுகாப்பிற்கான வலுவான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் எனக்கு எந்தக் குறையும் தென்படவில்லை.''

அவர் கூறுகின்றார்: ''இப்போது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவைக் கேட்ட பிறகு சுயமாக நான் முஸ்லிமாக இருப்பதில் இப்போது நான் பெருமையை உணர ஆரம்பித்தேன்.''

பிறகு செராலியோனின் ஒரு பாராளுமன்ற உறுப்பினரான அலி கலாக்கோ அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''அஹ்மதிய்யத்தே இஸ்லாத்தின் உண்மையான படமாக இருக்கின்றது. அஹ்மதி முஸ்லிம்கள் அமைதியை வளர்ச்சி அடையச் செய்வதற்கு முயற்சிகள் மதிக்கத்தக்கதாகும். இன்று இஸ்லாத்தின் பெயர் எல்லா பக்கமும் தீவிரவாதத்துடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றது. ஆனால், அஹ்மதிகள் இந்த தாக்கத்தை தவறு என்று நிரூபித்து வருகின்றனர். மாநாட்டின் ஏற்பாடுகள் மிகவும் சிறப்பாக இருந்தன. சின்னஞ்சிறு சிறுவர்கள் மக்களுக்கு தொண்டு செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர். அந்தக் காட்சி ஆன்மாவிற்க எழுச்சியூட்டக் கூடியதாக இருந்தது. எனது கருத்தின்படி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உண்மையை நிரூபிப்பதற்கு இந்தக் காட்சியே போதுமானதாக இருக்கின்றது.''

பிறகு துருகிஸ்தானிலிருந்து அப்துர் ரஷீத் சாஹிப் என்ற நண்பர் ஒருவர் மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்: ''நான் ஏறக்குறைய இரண்டு வருடங்களுக்கு முன்னால் எனது ஒரு நண்பரிடமிருந்து இந்த ஜமாஅத்தைப் பற்றி கேள்விப்பட்டேன். அதன் முழக்கம் எல்லாரிடத்திலும் அன்பு, எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்பதாக இருந்தது.''

அவர் கூறுகின்றார்: ''நான் எப்போது இலண்டன் வந்தேனோ அப்போதிருந்தே இங்குள்ள மக்களின் அன்பால் நான் சூழப்பட்டு நிற்கின்றேன். உண்மையான பெற்றோர்கள் மற்றும் குடும்பத்திலுள்ளவர்களின் மத்தியில் நான் இருக்கின்றேன். எனது உள்ளத்தில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்திய விஷயங்களில் இதுவும் ஒன்றாகும். அதாவது எந்த நாளில் நாங்கள் துருக்கியிலிருந்து இலண்டன் வந்தடைந்தோமோ அந்த நாளில் விமான நிலையத்திலிருந்து நாங்கள் ஹோட்டலுக்கு கொண்டு செல்லப்பட்டோம். நாங்கள் அங்கு சென்று சேர்ந்ததும் டியூட்டியில் இருந்த அஹ்மதி இளைஞர்கள் ஸலாம் கூறிய பிறகு உடனடியாக அவர்கள் எங்களிடம் நீங்கள் பயணம் செய்து இங்கு வந்துள்ளீர்கள். நீங்கள் பசியுடன் இருப்பீர்கள். எனவே, நீங்கள் உணவு உண்ணுங்கள். பிறகு ஓய்வெடுங்கள் என்று கூறினர். இந்த விஷயத்தைக் கேட்டு எனக்கு ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் கூறிய அந்த ஹதீஸ் எனது நினைவில் வந்து விட்டது. அன்னார் ஒருமுறை ஒரு சபையில் விருந்தினர் வந்த சமயத்தில் தமது தோழர் ஒருவரைப் பார்த்து பெருமானார் (ஸல்) அவர்கள் இவரை யார் உங்களது வீட்டிற்கு அழைத்து செல்வார்? என்று கேட்டார்கள்.'' பிறகு விருந்தோம்பல் தொடர்பாக நீளமான ஒரு நபிமொழியைக் அவர் கூறினார்.

இவர் கூறுகின்றார்: ''மாநாட்டில் கலந்து கொண்டதன் மூலம் எனக்கு இந்த விஷயம் புரிந்து விட்டது. அதாவது நான் எனது முழு வாழ்வையும் அல்லாஹ்வை தேடிய நிலையில் கழித்து விட்டேன். ஆனால், அல்லாஹ்வை இங்கு வந்த பிறகுதான் நான் பெற்றுக் கொண்டேன். அல்லாஹ்வின் அருளால் எனக்கு உலகளாவிய பைஅத்தின் மகத்தான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்திருக்–கின்றது.'' இங்கு வந்த பிறகு அவர் பைஅத்தும் செய்து விட்டார். இவர் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு என்னிடம் பேசிக் கொண்டிருந்தார். இவர் கூறுகின்றார்: ''நான் பைஅத் செய்தபோது எனது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. எனது தந்தையின் மரணத்தின்போது கூட எனக்கு இவ்வாறு கண்ணீர் வரவில்லை. வெளிப்படை–யாகப் பார்க்கும்போது எவ்வித காரணமுமின்றி இந்த கண்ணீர் வருவதுபோன்று தோன்றலாம். பிறகுதான் எனக்கு புரிய வந்தது. அதாவது, பூமியில் இப்போது எத்தகைய ஒரு நம்பிக்கை உருவாகி விட்டது என்றால், மேலும் இலட்சக்கணக்கான மக்களின் எத்தகைய ஒரு ஜமாஅத் உருவாகி விட்டது என்றால் அது சுயமே ஈடிணையற்றதாகத் திகழ்கின்றது. இந்த ஜமாஅத் தனது செயலால் ஒவ்வொரு துன்பத்தையும் ஆபத்தையும் உலகிலிருந்து அகற்றுவதற்காக எல்லா விதமான தியாகங்களையும் செய்யத்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*என் கையில் ஒரு தீபம் உள்ளது. என்னிடம் வருபவர் அவ்வொளியிலிருந்து நிச்சயம் ஒளி பெறுவர். ஆனால் தவறான எண்ணத்தாலும் தீய யூகத்தாலும் விலகி ஓடுபவன் இருளில் எறியப்படுவான். இக்காலத்தின் உறுதி வாய்ந்த கோட்டை நானே....*

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆதம்பாக்கம்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*திருக்குர்ஆனின் முக்கிய போதனைகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, ஓரிறைக் கொள்கை, இறை அன்பும், இறைவனுக்கு கட்டுப்படுதலும் ஆகும். மற்றொன்று தன் உடன்பிறப்புகளுக்கும் அயலாருக்கும் இரக்கம் காட்டுதல் ஆகும்.*

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.*

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

தயாராக இருக்கின்றது.'' பிறகு புதிதாக பைஅத் செய்தவர்களில் சிலர் அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகிய காட்சிகளைப் பார்க்கும்போது இவர்களது ஈமான் மேலும் அதிகரிக்கின்றது.

ஜமைக்காவிலிருந்து மாநாட்டில் கலந்து கொண்ட புதிதாக பைஅத் செய்த ஒரு பெண்மணி வின்சென்ட் வில்லியம்ஸ் சாஹிபா அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஆண்டு மாநாட்டில் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சொற்பொழிவுகளும், குறிப்பாக உலகளாவிய பைஅத்தும் உணர்வுப்பூர்வமான ஓர் அனுபவமாக இருந்தது. இங்கு பல பணியாளர்களும் தன்னார்வத் தொண்டர்களாகத் தொண்டு செய்கின்றனர் என்பது எனக்கு தெரிய வந்ததும் இந்த பணியாளர்களின் தர்பிய்யத்திற்காக ஜமாஅத்திற்கு பல துன்பங்களை எதிர்கொள்ள வேண்டியது வரும் என்று எனக்கு தோன்றியது. ஆனால், தன்னலம் பார்க்காமல் இந்த பணியாளர்கள் தொண்டு செய்வதை நான் பார்த்ததும் இது இறைவனின் ஒரு ஜமாஅத்தாகும். காலத்தின் கலீஃபாவிற்கு நேரடியாக இறைவனிடமிருந்து உதவியும் ஆதரவும் கிடைக்கின்றது என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.''

இவர் கூறுகின்றார்: ''குறிப்பாக கார் பார்க்கிங் செய்யும் இடத்தில் தொண்டு செய்து வந்த குத்தாம் மோசமான சிதோஷண நிலை இருந்தும் கூட தங்களது கடமைகளை உள்ளத்தின் ஆர்வத்துடன் நிறைவேற்றி வந்ததைப் பார்த்து நான் வியப்பில் ஆழ்ந்து விட்டேன். இந்த எல்லா காட்சிகளையும் எனது முழு வாழ்நாளில் முதல் முறையாக நான் பார்த்தேன்.''

ஐவரிகோஸ்டிலிருந்து அங்குள்ள நகரத்தின் மேயரான Zrakpa Dopeu என்பவர் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: ''நான் இஸ்லாம் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதும் மக்களிடமிருந்து அதிகமாக எதிர்மறையான விஷயங்களையே கேள்விப்பட்டேன். எனக்கு இது தொடர்பாக அதிகமாக எந்த அறிவும் இருக்கவில்லை. எனவே, நான் மிகவும் கவலைப்பட்டேன். அஹ்மதிகள் முஸ்லிம்களா? இல்லையா? என்று நான் எப்படி முடிவெடுப்பது? என்று நான் மிகவும் கவலைப்பட்டேன். நான் ஜமாஅத்தில் இணைந்து பாவம் செய்த விடவில்லையே என்ற எண்ணம் ஏற்பட்டது. நான் ஜமாஅத்தை தொடர்பு கொண்டபோது அவர்கள் எனக்கு ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு அழைப்பு விடுத்தனர். அங்கு சென்று ஜமாஅத்தை அருகிலிருந்து பார்க்க முடியும் என்று நான் கருதினேன். இங்கு வந்த பிறகு நான் இஸ்லாத்தின் அசல் படத்தை பார்த்தேன். கலீஃபத்துல் மஸீஹ் அவர்களது ஒவ்வொரு சொற்பொழிவும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரால் ஆரம்பமாகின்றது. அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயருடனேயே அது முடிகின்றது. ஆண்டு மாநாட்டின் சுற்றுச் சூழலைப் பார்த்து அஹ்மதிகள் முஸ்லிம்களா? இல்லையா? என்ற எனது கேள்விக்கு பதில் கிடைத்தது. இப்போது நான் செய்தது முற்றிலும் சரியானதாகும் என்று பெருமையுடன் கூறுவேன். அஹ்மதிகளே உண்மையான முஸ்லிம்கள் ஆவர். அஹ்மதிகளின் எல்லா பணிகளும் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்பவே இருக்கின்றன என்பதில் எனக்கு முற்றிலும் திருப்தி ஏற்பட்டு விட்டது.''

பெலிஸின் தலைநகரமான Belmopan –ன் மேயர் காலித் பிலால் சாஹிப் அவர்களும் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அவர் கூறுகின்றார்: ''ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வது மிகவும் சிறந்த அனுபவமாக இருந்தது. ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு நபரும் எனக்கு தொண்டு செய்வதிலேயே ஈடுபட்டு வருவது போன்று எனக்கு தோன்றியது. இந்த அனுபவத்தின் மூலமாக இஸ்லாத்தைக் கற்றுக் கொள்வதற்காக எனது உள்ளத்தில் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது. இங்கிருந்து நான் சகோதரத்துவத்தின் பாடத்தை எனது நாட்டிற்குத் திரும்ப எடுத்துச் செல்கின்றேன். இது எப்படிப்பட்ட விஷயம் என்றால், இது எனக்கு மீண்டும் மீண்டும் பல்வேறு இடங்களில் தென்படுகின்றது. நான் இதனை எனது பாட்டிலில் அடைத்து இதை பெலிஸிற்கு எடுத்துச் சென்று அதனை எனது நாட்டிலுள்ளவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்–திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?''

பிறகு கூறுகின்றார்: ''மாநாட்டின் ஏற்பாடுகள் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது. என்னை இங்கு வரவேற்றத்தை நான் எப்போதும் நினைவில் வைத்திருக்கின்றேன். நீங்கள் இங்கு வருவதற்கு எனக்கு அழைப்பு விடுத்தமைக்காக நான் எப்போதும் உங்களுக்கு நன்றியுள்ளவனாக இருப்பேன்.''

இவர் கூறுகின்றார்: ''ஒரு நாள் நான் விருந்தினர்களின் கூடாரத்தில் தனியாக இருந்தேன். சில குத்தாம் என்னிடம் வந்தனர். நான் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கின்றேன். எனவே, ஒருவேளை நான் தனிமையில் இருப்பதாக சுயமே நானே உணரலாம். இதை அறிந்துதான் இந்த குத்தாம் என்னிடம் வந்துள்ளனர் என்பது எனக்கு தெரியும். இந்த விஷயம் என்னுடைய உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. நாம் நமது விருந்தினர்களுடன் இருக்கிறோம் என்பதைப் பற்றிய உணர்வு கூட இங்குள்ள இளைஞர்களுக்கு இருக்கின்றது.''

பிறகு உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியின் மூலமாகவும் அந்நியர்களின் மீது தாக்கம் ஏற்படுகின்றது. ஒரு சம்பவத்தை ஏற்கனவே நான் கூறி விட்டேன். இது இன்னொரு சம்பவமாகும். குரோஷியாவின் பாராளுமன்ற உறுப்பினர் மாநாட்டில் கலந்து கொண்டார். உலகளாவிய பைஅத் நிகழ்ச்சி தொடர்பாக அவர் கூறினார். Mr. Angvich Damanco என்பது இவரது பெயராகும். இவர் கூறுகின்றார்: ''உலகளாவிய பைஅத் நிகழ்ச்சி என்னை மிகுந்த தாக்கத்திற்கு உள்ளாக்கியது. நான் கிறித்தவ மதத்தின் Faith Conformation நிகழ்ச்சியில் ஒருமுறை கலந்து கொண்டேன். ஆனால், எத்தகைய உணர்வையும் கலப்பற்ற தன்மையையும் மார்க்கத்துடன் நன்றியுணர்வுடன் நடந்து கொள்கின்ற உறுதியையும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியில் பார்த்தேனோ அது மிகவும் நூதனமான வியக்கத்தக்க அனுபவமாகும். அதை எனது முழு வாழ்நாளிலும் நான் நினைவில் வைத்திருப்பேன்.''

எகிப்தைச் சார்ந்த டாக்டர் ஹானி ரிஸ்வான் சாஹிப் அவர்கள் உலகளாவிய பைஅத் நிகழ்ச்சி நடந்த தருணத்தில் மாநாட்டுத் திடலில் நுழைந்தார்கள். மக்களின் வரிசை மாநாட்டுத் திடலுக்கு வெளியிலும் மிகவும் தூரம் வரை இருந்தது. அதைப் பார்த்து இவர்கள் மிகுந்த தாக்கத்திற்கி, மிகவும் வியந்து போனார். அவர் கூறுகின்றார்: ''எங்களது நாடான எகிப்தில் இதுபோன்ற ஒழுக்கமும் கட்டுப்பாடும் இருப்பது சாத்தியமற்றதாகும்.'' இவர்களது உணர்வுகள் எந்த அளவு மிகைத்து விட்டது என்றால் பைஅத்தின்போது இவர்களும் ஒரு வரிசையில் தன்னையும் இணைத்துக் கொண்டார்கள். இஸ்திக்ஃபார் மற்றும் அரபி சொற்களைத் திரும்பத் திரும்ப கூறிக் கொண்டிருந்தார். இவ்வாறு திரும்பத் திரும்ப கூறினார் என்பதன் பொருள் அவர் பைஅத் செய்து விட்டார் என்பது அல்ல. உணர்வுப்பூர்வமான ஒரு நிலைமை அவரிடம் ஏற்பட்டது. ஆனால் அவர் எந்நிலையிலும் இவ்விஷயங்களின் பக்கம் நான் சிந்திப்பேன் என்று கூறியுள்ளார்.

ஆண்டு மாநாட்டின் சுற்றுச் சூழலின் தாக்கத்தால் பத்திரிகைகளுக்கும் கவனம் உருவாகி இருக்கின்றது. பிரஸ் இப்போது இஸ்லாம் தொடர்பாக சரியான செய்திகளைக் கூறும் நிர்பந்தத்திற்கும் ஆளாகி இருக்கின்றது. ஃபிரான்ஸின் பத்திரிகையான Liberation உடைய பத்திரிகை நிருபரான Sonia Delisalle என்ற பெண் தனது தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்: ''இங்கு நான் வந்ததும் முதலில் எனக்கு கவலை ஏற்பட்டது. இங்கு ஆண்களையும் பெண்களையும் தனித்தனியாக வைத்திருப்பதைப் பார்த்து எனக்கு கவலை ஏற்பட்டது. பிறகு நான்

**திருக்குர்ஆனிலிருந்து...**

*உம்முடைய இறைவன், தான் விரும்புபவருக்கு உணவைத் தாராளமாக வழங்குகின்றான். மேலும், (தான் விரும்புபவருக்கு அவற்றைக்) குறைவாகக் கொடுக்கின்றான். நிச்சயமாக, அவன் தன் அடியார்களை நன்கு அறிந்து கொள்பவனும், நன்கு பார்ப்பவனும் ஆவான். (17:31)*

**முஹம்மது ஆதில்**

சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், சூலூர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவன் தன் கரத்தினால் மண்ணில் விதைத்த விதையே. இறைவனின் இந்த விதை முளைக்கும்; பூக்கும்.... பின்னர் வலுவானதொரு மரமாகி விடும் என்று கூறியுள்ளான்.*

**அட்வகேட் சலீம் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நீங்கள் அளந்து கொடுக்கும் போது, அளவை முழுமையாகக் கொடுங்கள். (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) சரியான தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததுமாகும். (17:36)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**

மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

மாநாட்டுத் திடலைப் பார்க்கச் சென்றபோது அங்கு பெண்களுக்கு பகரமாக ஆண்கள் உணவை சமைத்துக் கொண்டிருந்தனர். பெண்கள் பகுதியில் சென்றபோது பெண்களுக்கு தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டதன் காரணமாக பெண்கள் அதிக சுதந்திரமாக இருந்தது எனக்கு தெரிய வந்தது. எல்லாரையும் விட அதிகமாக பெண்களுக்கு சுயமே செயல்படுவதற்கான உரிமை இருந்தது. அவர்கள் எல்லா பணிகளையும் தமது விருப்பத்திற்கேற்ப செய்து கொண்டிருந்தனர்.'' இங்கு வசிக்கின்ற சில சிறுமிகள் படிப்பு என்ற பெயரில் சுதந்திரம் என்ற பெயரில் தம்மீது அநீதியிழைக்கப்படுவதாகக் கருதுகின்றனர். அவர்கள், அந்நியர்களுக்குக் கூட நமது சுற்றுச் சூழல்தான் பிடித்திருக்கின்றது என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

பிறகு பொலிவியாவின் National News Channel ன் ஒரு Journalist தமது தாக்கங்களை எடுத்துக் கூறியவாறு இவ்வாறு கூறினார்: ''மேற்கத்திய நாடுகளின் பார்வையில் இஸ்லாம் பெண்களை பின்னால் வைப்பதாகவும் அவர்களுக்கு எந்த தகுதியும் இல்லை என்று கருதுவதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் இங்கு நான் பார்த்தேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் பெரும் வெற்றிகளைப் பெற்ற பெண்களுக்குப் பரிசுகளை வழங்குகின்றார்கள். ஒவ்வொரு பெண்ணும் தனிப்பட்ட முறையில் அவருக்கு இருக்கும் தகுதியின் அடிப்படையில் அழைக்கப்படுகின்றார். அப்போது எனது உள்ளத்தில் நான் திரும்பச் சென்று எனது பத்திரிகையில் இதுபற்றி கண்டிப்பாக எழுத வேண்டும் என்ற ஆசை எனது உள்ளத்தில் தீவிரமாக ஏற்பட்டது. உலகிலுள்ள எந்த தலைவராவது பெண்களை மட்டுமே நோக்கி எப்போதாவது சொற்பொழிவு நிகழ்த்தி இருக்கின்றாரா? ஒருபோதும் இல்லை.''

பிறகு பத்திரிகை நிருபராக ஒரு பெண்மணி உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியின் போது பைஅத்தின் சொற்களை உடனுக்குடன் திரும்பக் கூற ஆரம்பித்தார். அவரிடம் அதுபற்றி கேட்டபோது, அந்த சமயத்தில் என்ன நடந்தது? என்று எனக்கு எதுவும் தெரியாது. ஆனால், எனது வாழ்நாளில் இதுபோன்ற உணர்வுகள் இதற்கு முன்னால் ஒருபோதும் வந்ததில்லை. நான் என்னை அறியாமலேயே இந்த சொற்களைத் திரும்பத் திரும்ப கூறிக் கொண்டிருந்தேன். முதலில் நான் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் உணர்வுகளைப் பொங்கி எழச் செய்வதற்கு இசை இருப்பது அவசியமாகும் என்று கருதினேன். அது இல்லாமல் உணர்வுகள் பொங்கி எழ முடியாது என்று நான் கருதினேன். ஆனால், உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியின்போது அஹ்மதிகளின் உள்ளத்திலிருந்து நேரடியாக இந்த உணர்வுகள் வெளிப்பட்டது எனக்கு தெரிய வந்தது. எவ்வகையிலுள்ள இசைக்கான தேவையும் அங்கு இருக்கவில்லை.

பொலிவியாவிலிருந்து ஒரு பத்திரிகை நிருபரான கார்லூஸ் ஜமீ ஒரியாஸ் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: ''அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பாக எந்த விஷயம் என்னை எல்லாவற்றையும் விட தாக்கத்திற்கு ஆளாக்கியது என்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காக வெளிப்படுத்துகின்ற உணர்வுகளும் அதற்காகஅது செய்யும் முயற்சிகளும் ஆகும். இது எப்படிப்பட்ட ஒரு தூதுச் செய்தி என்றால் இன்றைய காலக்கட்டத்தில் இது மிகவும் அவசியமானதாகும். இவ்வாறே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பல்வேறு சமுதாயங்கள் மற்றும் பல்வேறு நாகரிகங்களைச் சார்ந்திருக்கின்ற நபர்களுக்கு இஸ்லாமிய மார்க்கத்தின் உண்மையான அடித்தளங்களின் பக்கம் மக்களை ஒன்று சேர்க்க வேண்டும் என்ற விருப்பம் போற்றத்தக்கதாகும்.''

பிறகு இவர் கூறுகின்றார்: ''இந்த விஷயமும் குறிப்பாக எனது வியப்பிற்குக் காரணமாக இருந்தது. இவ்வளவு விரிவான ஏற்பாடுகள் தன்னார்வத் தொண்டர்களின் உதவியால் செய்யப்படுகின்றது. இதிலிருந்து ஒரு பணி எவ்வளவுதான் கடினமானதாக இருந்தாலும் அதனை ஈமான், கலப்பற்ற தன்மை மற்றும் எந்த சுய நோக்கமும் இல்லாத அன்பு ஆகியவற்றின் மூலம் பெற முடியும் என்பது தெரிய வருகின்றது.''

பிறகு கூறுகின்றார்: ''அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஆண்கள், பெண்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இதன் மூலம் எனது பல சந்தேகங்கள் அகன்று விட்டன. இந்த சொற்பொழிவின் மூலம் ஆண்கள், பெண்கள் தொடர்பான இஸ்லாமிய போதனைகளின் ஞானங்கள் மேலும் எனக்கு அதிகமாக தெரிய வந்தன.'' அஹ்மதி பெண்கள் பெற்ற மகத்தான வெற்றிகள் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் ஒரு விஷயமாகும். இதிலிருந்து ஆணும் பெண்ணும் உலக அமைதிக்காக முயற்சி செய்வது அவ்விருவர் மீது கட்டாயமானதாக இருக்கின்றது. முதலில் குடும்ப அளவிலும், பிறகு சமூக அளவிலும், பிறகு நாடு அளவிலும், பிறகு முழு உலக அளவிலும் அவர்கள் இதற்காக முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு கூறுகின்றார்: ''உங்களது இறுதி உரை எவ்வாறு அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு அவசியமானதாக இருக்கின்றதோ அவ்வாறே உலகிற்கும் மற்ற சமுதாயங்களுக்கும் மிகவும் அவசியமானதாகும்.''

எந்நிலையிலும் ஆண்டு மாநாட்டின் சுற்றுச் சூழலிலும் டியூட்டி கொடுப்பவர்களிடமும் ஒரு தாக்கம் இருக்கின்றது. அது நீதியை விரும்புகின்ற ஒவ்வொருவரிடமும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அல்லாஹ் டியூட்டி கொடுத்த அனைவருக்கும் அதற்கான நற்கூலியை வழங்குவானாக. இஸ்லாத்தின் இந்த அமைதியான தப்லீகின் ஒரு பகுதியாக இருக்கின்ற மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கும் இதற்கான நற்கூலியை வழங்குவானாக. நாம் குறிப்பாக பணியில் ஈடுபட்டிருந்த ஆயிரக்கணக்கான ஆண்களையும், பெண்களையும், சிறுவர்களையும், சிறுமிகளையும் நமது துஆக்களில் நினைவு கூற வேண்டும். இந்த முறை மழையின் காரணமாக சில ஏற்பாடுகளில் குறை இருந்தது. ஏதாவதொரு குறை ஏற்பட்டு விடுகின்றது. அவ்வாறிருந்தும் கூட பணியில் இருந்தவர்கள் மிகவும் நுட்பமாக செயல்பட்டு மிகவும் உழைத்தவாறு இந்த குறையை அதிகமாக நம்மை உணர வைக்கவில்லை. தண்ணீர் விநியோகமும் சில நேரங்களில் நின்று விட்டது. பொதுவாக ஏற்பாடுகள் சிறப்பாக இருந்தது.

மாநாட்டில் கலந்து கொண்ட பெரும்பாலார் மாநாட்டின் தாக்கங்கள் பற்றி எழுதியவை அனைத்தும் நல்ல விதமாகவே இருந்தன. சிலர் எதிர்மறையான தாக்கங்கள் பற்றியும் எழுதியுள்ளனர். ஆனால் இவ்வளவு பெரிய தற்காலிக ஏற்பாட்டில் ஒரு சில குறைகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் பணி செய்த எல்லா தன்னார்வத் தொண்டர்களும், இளைஞர்களும், பெண்களும், சிறுவர்களும், சிறுமிகளும் எந்நிலையிலும் நாம் நன்றி செலுத்துவதற்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கின்றனர். சில மக்களிடமிருந்து புகார்கள் வந்திருந்தால் அல்லது கவனம் செலுத்த வேண்டிய விஷயங்கள் பற்றி கூறப்பட்டிருந்தால் அவற்றை நான் உங்களுக்கு அனுப்புகின்றேன். அவற்றை உங்களது Red Book –ல் நீங்கள் எழுதி வைக்க வேண்டும். வருங்காலத்தில் மேலும் சிறந்த நிலையை உருவாக்க முயற்சி செய்யுங்கள் என்று நான் மாநாட்டு அமைப்பாளர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறே பிரஸ்ஸும் நல்ல கவரேஜ் செய்திருக்கின்றது. ஆண்டு மாநாடு தொடர்பாக ஊடகங்கள் மூலமாக **358** செய்திகள் ஒளிபரப்பப் –பட்டிருக்கின்றன. மேலும் இது அதிகரித்து வருகின்றது. ஆன்லைன் மீடியா மூலமாக **36** மில்லியன் நபர்களுக்கு தூதுச் செய்தி எட்டியிருக்கின்றது. டி.வி மற்றும் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட செய்திகள் மூலம் **31** மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கும் பிரிண்ட் மீடியா மூலமாக இரண்டு மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியிருக்கின்றது.


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

இவ்வுலகில் இறைவனைப் பார்க்கும் பேறிழந்தவர்கள் மறுமையிலும் இருளிலே இருப்பர். இறைவன் கூறுகிறான். இவ்வுலகில் குருடராக இருப்போர் மறுமையிலும் குருடராகவே இருப்பர். (17:73)

**K. சலீம் அஹ்மது**

பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, திருச்சி.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

ஆணவத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என நான் என் ஜமாஅத்திற்கு அறிவுறுத்துகிறேன். ஏனென்றால் கண்ணியமிக்க நமது இறைவனின் பார்வையில் ஆணவம் வெறுக்கத்தக்கதாகும்.

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**

மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களது இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால், நீங்கள் எல்லா விதமான ஆபத்துகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளலாம். (2:22)

**A. பஷீர் அஹ்மது**

பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

இதை தவிர Socila Media மூலமாக 58 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியது. M.T.A –வின் LIVE Streaming மூலம் இறுதி நாளில் நான் நிகழ்த்திய சொற்பொழிவை இரண்டரை இலட்சம் மக்கள் கேட்டுள்ளனர். இவ்வாறு மிகவும் எச்சரிக்கையுடன் நாம் மேற்கொண்ட கணிப்பிற்கேற்ப இந்த எல்லா வழிகளின் மூலமாகவும் 128 மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியுள்ளது. எந்த புகழ்பெற்ற மீடியாக்கள் ஆண்டு மாநாட்டை கவரேஜ் செய்தனவோ அவற்றில் B.B.C T.V., B.B.C Radio, I T.V., Independent என்ற பத்திரிகை, The Times என்ற பத்திரிகை, Sunday Express, London Evening Standard, New York Times, Facebook LIVE, Associates Press, Press Association, Special News Agency, E.F.E., Indian News Agency, P.T.I., French News Illibiration Unilate ஆகியவை விரிவாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூதுச் செய்தியை உண்மையான இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்திருக்கின்றன. பத்திரிகைகள் மூலமாக நடைபெற்ற இந்த விஷயத்திற்காகவும் நாம் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும்.

ஆப்பிரிக்காவிலும் ஆண்டு மாநாடு கவரேஜ் செய்யப்பட்டிருக்கின்றது. ஆப்பிரிக்காவில் M.T.A ஆப்பிரிக்கா தவிர 10 சேனல்களில் ஆண்டு மாநாடு தொடர்பான ஒளிபரப்புகள் காட்டப்பட்டன. பல்வேறு நாடுகளில் 150 –ற்கும் அதிகமான மணி நேரங்கள் வரை கவரேஜ் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த சேனல்கள் மூலமாக ஏறக்குறைய 60 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வரை ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகள் சென்றடைந்தன. இந்த 10 சேனல்களும் உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியையும் எனது எல்லா சொற்பொழிவு –களையும் நேரடியாக ஒளிபரப்பியது. செராலியோன் National T.V தொடர்ந்து 100 மணி நேரங்களில் ஆண்டு மாநாட்டின் 3 நாள்கள் நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பியது. போ மற்றும் கனமா ஆகிய டி.வி சேனல்கள் ஆண்டு மாநாட்டு நிகழ்ச்சிகளை முழுமையாக ஒளிபரப்புவதற்காக நாட்டின் ஏனைய ஒளிபரப்புகளை நிறுத்தி வைத்தன. இவ்வாறு முழு நாட்டிலும் ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகள் பார்க்கப்பட்டன; கேட்கப்பட்டன. கேம்பியாவில் முதன் முறையாக National T.V ஆண்டு மாநாட்டின் சொற்பொழிவு –களையும் ஏனைய நிகழ்ச்சிகளையும் காட்டியது. ஆண்டு மாநாட்டின் நேரடி ஒளிபரப்பைத் தவிர B.B.C Uganda ஆண்டு மாநாடு தொடர்பாக Suwahili மொழியில் செய்தியை ஒலிபரப்பியது. இதனையும் அந்தப் பகுதியிலுள்ள ஏறக்குறைய 20 மில்லியன் மக்கள் பார்க்கின்றனர். கானா National T.V., Radio மற்றும் News Storage மூலம் ஏறக்குறைய 5 மில்லியன் மக்கள் வரை செய்தி எட்டியுள்ளது. பத்திரிகைகள் மற்றும் T.V சேனல் மூலமாக எல்லா ஆப்பிரிக்க மீடியாக்களையும் சேர்த்து U.K ஆண்டு மாநாடு பற்றிய செய்திகள் ஏறக்குறைய 35 மில்லியன் மக்கள் வரை சென்று சேர்ந்துள்ளது.

இவையெல்லாம் அல்லாஹ்வின் அருள்கள் ஆகும். நமது முயற்சிகள் இவற்றில் மிகவும் சாதாரணமானதுதான். இந்த சாதாரண முயற்சிகளுக்காக நான் நமது பிரஸ் மற்றும் மீடியா பிரிவுகளுக்கு நன்றி செலுத்துகின்றேன். மற்ற நாடுகளில் உள்ள பிரஸ் மற்றும் மீடியா பிரிவுகளும் பணியாற்றியிருக்கின்றது. அல்லாஹ் அவர்களுக்கு அதற்கான நற்கூலியை வழங்குவானாக. மிகவும் விரிவான அளவில் இந்த செய்திகள் ஜமாஅத்தின் தப்லீகிற்கு காரணமாக ஆகின்றது. அல்லாஹ் நமது பொறுப்புகளை நிறைவேற்றுபவர்களாக நம்மை ஆக்குவானாக. அல்லாஹ்வின் அருள்களை ஈர்ப்பதற்கு எப்போதும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியவாறு நமது கடமைகளை நிறைவேற்றுபவர்களாக நாம் இருப்போமாக. நான் கூறாமல் விடுபட்ட ஒரு விஷயத்தையும் கூறி விடுகின்றேன். இந்த வருடமும் கடந்த வருடத்தைப் போன்றே கனடாவிலிருந்து குத்தாம் வந்திருந்தனர். இவர்களும் வகாரே அமல் செய்து Windup பணிகளில் பங்கெடுத்தனர். ஏறக்குறைய 350 பேர் தனி விமானம் மூலம் மாநாட்டிற்கு வந்தனர். மிகவும் நல்ல முறையில் இவர்கள் பணிகளைச் செய்தனர். நான்கைந்து நாட்களாக இவர்கள் பணி செய்து வந்தனர். ஆண்டு மாநாடு முடிந்த நாளிலிருந்து நேற்று வரை அவர்கள் இந்தப் பணியைச் செய்து முடித்துள்ளனர். செய்யவிருக்கின்ற பணிகளை நேற்றிலிருந்து U.K –வின் குத்தாம் செய்கின்றனர். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் நற்கூலியை வழங்குவானாக.

கனடாவின் குத்தாம் ஆண்டு மாநாடு நடைபெறுவதற்கு முன்னதாகவே இங்கு வந்து விட்டதால் அவர்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்டிருப்பார்கள் என்று நான் நம்புகின்றேன். அவ்வாறு கேட்காமல் இருந்திருந்தால் அவர்கள் பெரும் தவறிழைத்திருக்கின்றனர். எனவே, வருங்காலத்தில் அவர்கள் வர வேண்டுமானால் ஆண்டு மாநாட்டின் மூன்று நாட்களிலும் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்க வேண்டும். அதற்குப் பிறகு Windup பணிகளில் பங்கு பெற வேண்டும். அல்லாஹ் பணி செய்தவர்களுக்கு நற்கூலியை வழங்குவானாக. பணியில் ஈடுபட்ட பெண்களுக்கும் நற்கூலியை வழங்குவானாக. இந்த மாநாட்டின் மூலம் எதைக் கண்டு கொள்வதற்கு நமக்கு சந்தர்ப்பம் கிடைத்ததோ அதனை நாம் நமது வாழ்வின் அங்கமாக ஆக்குவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக.

தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு சிலருக்கு நான் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். ஒரு ஜனாஸா மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதி ஸக்கியா பேகம் சாஹிபா உடையதாகும். இவர்கள் கர்னல் மிர்ஸா தாவூது அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவியாவார்கள். இவர்கள் அமத்துல் ஹஃபீஸ் பேகம் சாஹிபா மற்றும் நவாப் அப்துல்லாஹ் கான் சாஹிப் ஆகியோரின் மகள் ஆவார்கள். 23 ஜூலை அன்று இரவில் Tahir Heart Institute –ல் இவர்கள் தமது 96 –வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதா கர்னல் மிர்ஸா தாவூது அஹ்மது சாஹிப் அவர்கள் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனாவார்கள். மர்ஹூமா அவர்களின் மனைவி ஆவார்கள். இவ்வாறு இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தாய்வழிப் பேத்தியும் அவர்களது பேரரின் மனைவியும் ஆவார்கள். கடந்த மூன்று நான்கு வருடங்களாக இவர்கள் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். கடந்த சில மாதங்களாக இவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் இவர்கள் வஸிய்யத் செய்திருந்தார்கள். நீண்ட காலத்திற்கு முன்பே வஸிய்யத் செய்திருந்தார்கள். இவர்களுக்கு ஐந்து மகள்கள் உள்ளனர். மதிப்பிற்குரிய மஹ்மூது கான் சாஹிப் அவர்களின் மனைவியான அமத்துஸ் ஸாஃபீ சாஹிபா. மஹ்மூது கான் சாஹிப் அவர்களும் நவாப் முபாரகா பேகம் சாஹிபா அவர்களின் பேரன் ஆவார்கள். இவ்வாறே அமத்துந் நாஸிர் சாஹிபா – இவர்களது கணவர் செய்யிது ஷாஹிது அஹ்மது ஆவார்கள். அமத்துல் முஸவ்விர் சாஹிபா – இவர்கள் டாகடர் நூரி அவர்களின் மனைவி ஆவார்கள். அமத்துல் முஇஸ் – இவர்கள் அமெரிக்காவிலுள்ள மன்சூர் ரஹ்மான் சாஹிபின் மனைவி ஆவார்கள். அல்லாஹ் இவர்களது பிள்ளைகளுக்கும் நன்மையிலும் தக்வாவிலும் முன்னேறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. தங்களது மூதாதையர்களின் நன்மைகளைத் தொடர்ந்து நீடிக்கச் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

மதிப்பிற்குரிய ஸக்கியா பேகம் சாஹிபா அவர்கள் கராச்சியின் ஒரு பகுதியின் லஜ்னா தலைவியாகவும் தொண்டாற்றுகின்ற நல்வாய்ப்பைப் பெற்றார்கள். குவாடில் அவர்கள் தங்கியிருந்த நாட்களிலும் லஜ்னாவின் பணிகளில் பங்கு பெறுகின்ற நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது. நவாப் அமத்துல் ஹஃபீஸ் பேகம் சாஹிபா அவர்கள் தமது பிள்ளைகள் தொடர்பாக ஒரு கட்டுரையை எழுதியுள்ளர்கள். அதில் இவர்களை மிகவும் புகழ்ந்து எழுதியுள்ளார்கள். குறிப்பாக நவாப் அப்துல்லாஹ் கான் சாஹிப் வஃபாத்தான பிறகு இவர்கள் தமது தாயாருக்கு அசாதாரணமான முறையில் தொண்டாற்றி –யுள்ளார்கள்.

டாக்டர் நூரி சாஹிப் எழுதுகின்றார்கள்: ‘‘விருந்தோம்பல் செய்கின்ற பண்பு இவர்களிடம் சிறப்பாகக் காணப்பட்டது. எவ்வித பாகுபாடுமின்றி எல்லாருக்கும் விருந்தோம்பல் செய்து வந்தார்கள். எல்லாரையும் வரவேற்கவும் செய்தார்கள்.’’

S. MABU
87541 71700
81240 22479
90955 89992
78719 66352
STAR ORGANIC
TERRACE GARDEN DIVISION
Email: Starorganicmabu@gmail.com
◗ Panchagavya
◗ Pest Repeller
◗ See Veed Extract
◗ All kinds of garden tools
THARPOLIN + POULTRY
EQUIPMENTS SALES
TIRUNELVELI DIST.

halal Grill house
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

இவ்வாறே டாக்டர் நூரி சாஹிப் கூறுகின்றார்கள்: “நான் என்னை ஜமாஅத்–திற்காக வஃக்ப் செய்த சமயத்தில் இவர்கள் என்னிடம் எனக்கு மகள் பிறந்தால் அவரை வக்ஃப் செய்ய வேண்டும் என்ற எனக்கு விருப்பம் இருந்தது. உங்கள் மூலமாக எனது அந்த ஆசை நிறைவேறி விட்டு என்று அவர்கள் கூறினார்கள்.”

அல்லாஹ் இவர்களது தகுதிகளை உயர்த்துவானாக. இவர்களுக்கு மன்னிப்பை வழங்கி இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக.

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய தாரிக் மஸ்ஊது சாஹிப் உடையதாகும். இவர்கள் ஜமாஅத்தின் முரப்பி ஆவார்கள். தலைமையக நஸாரத் இஸ்லாஹ்–வ–இர்ஷாதில் இவர்கள் முரப்பியாகப் பணியாற்றி வந்தார்கள். இவர்கள் மதிப்பிற்குரிய மஸ்ஊது அஹ்மது தாரிக் சாஹிப் அவர்களின் மகனாவார்கள். 27 ஜூலை அன்று தமது 27 –வது வயதில் ரப்வாவில் மின்சாரம் தாக்கியதன் காரணமாக இவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்களது குடும்பத்தில அஹ்மதிய்யத் இவர்களது கொள்ளுத் தாத்தாவான மதிப்பிற்குரிய மெஹர் பக்ஷ் சாஹிப் அவர்கள் மூலமாக வந்தது. இவர்கள் காஷ்மீரிலுள்ள ராஜிரியுடன் தொடர்பு உள்ளவர்களாக இருந்தார்கள். மெஹர் பக்ஷ் சாஹிப் 1920 –ல் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் கைகளில் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார்கள். தாரிக் மஸ்ஊது சாஹிப் அவர்கள் தஃலீமுல் இஸ்லாம் மேல்நிலைப் பள்ளியில் படித்து 2007 –ல் மெட்ரிக் தேர்ச்சி பெற்றார்கள். 2016 –ல் F.A தேர்வையும் இவர்கள் எழுதினார்கள். 2014 –ல் ஜாமிஆவில் தேர்ச்சி பெற்றார்கள். இளைஞரான இந்த முரப்பி மிகவும் கலப்பற்ற தன்மையைக் கொண்டவராக இருந்தார். நல்லியல்பை உடையவராகவும், பெற்றோர்களைக் கருத்தில் கொள்பவராகவும், நண்பர்களைக் கருத்தில் கொள்பவராகவும், ஏழைகளுக்கு உதவுபவர்களாகவும், தனக்குக் கிடைத்த குறைந்த அலவன்ஸில் பல ஏழைகளுக்கும் இவர்கள் உதவி செய்து வந்தார்கள். பல ஏழைகளும் இதைப் பற்றி பிறகு கூறினர். மூன்று அல்லது நான்கு நாட்களுக்குப் பிறகு இவருக்கு திருமணம் நடக்கவிருந்தது. ஆனால், அதற்கு முன்னதாகவே அல்லாஹ் அவரை தன்னிடம் அழைத்துக் கொண்டான். இவரை மன்னித்து இவருடன் கருணையுடன் நடந்து கொள்வானாக. மர்ஹூம் வஸிய்யத் செய்திருந்தார். இவருக்கு தனக்குப் பின்னால் தமது பெற்றோர்களையும் மூன்று சகோதரர்களை அதாவது மதிப்பிற்குரிய அஷ்ஃபாக் அஹ்மது ஸஃபர் சாஹிப், ஸஃப்ராஸ் அஹ்மது ஜாவீது சாஹிப், அதாவுர் ரஹீம் சாஹிப் ஆகியோரை விட்டு விட்டுச் சென்றுள்ளார். ஃபவ்ஸியா மஸ்ஊது சாஹிபா என்ற ஒரு சகோதரியும் இவருக்கு இருக்கின்றார்.

இவரது தாயார் எழுதுகின்றார்: சந்தாக்களில் அதிகமாக பங்கு பெறுவதுடன் எங்களையும் சந்தாக்களில் பங்கு பெறுமாறு அவர்கள் போதித்து வந்தார்கள்.

இவர்களது தந்தையார் கூறுகின்றார்: கிலாஃபத்தின் மீது அளவு கடந்த அன்பு வைத்திருப்பவராக அவர் இருந்தார். மிகவும் நல்ல மனிதராவார். ஜமாஅத்தான தொழுகைகளை நிறைவேற்றுகின்ற பழக்கம் எப்போதும் இருந்து வந்தது. முரப்பியாக ஆகுவதற்கு முன்னரும் கூட குடும்பத்தினருக்கு தொழுகையைப் பற்றி இவர்கள் போதனை செய்து வந்தார்கள். ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு வந்ததும் முறையாக திருக்குர்ஆனை ஓதி வந்தார்கள். அப்போது எங்களுக்கு எங்களது பலவீனத்தின் மீது வெட்க உணர்வு ஏற்பட்டது. மிகவும் கீழ்ப்படிந்து நடக்கின்ற மகனாக அவர் இருந்தார். பெற்றோர்களிடமும், குடும்பத்தினரிடமும் மிகவும் அன்புடன் நடந்து கொள்பவராக இருந்தார். ஒருபோதும் கருத்து வேறுபாடு கொண்டவராக அவர் இருக்கவில்லை. கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும் கூட மிகவும் பொறுமையுடன் விஷயத்தைப் புரிய வைக்கக் கூடியவராக அவர் இருந்தார். கிலாஃபத்திற்காக மிகவும் தன்மான உணர்வு கொண்டவராக அவர் இருந்தார். யாராவது எங்காவது ஜமாஅத் அமைப்பிற்கு எதிராகவோ அல்லது கிலாஃபத்தின் உயர் தகுதிக்கு எதிராகவோ பேசினால் உடனடியாக அவரை அவ்வாறு பேசுவதிலிருந்து தடுத்து நிறுத்துவார். பேசிய நபர் அதிலிருந்து தன்னைத் தடுத்து கொள்ளாமல் இருந்தால் அவர் அந்த சபையை விட்டு எழுந்து சென்று விடுவார். அல்லாஹ் அவரது தகுதியை உயர்த்துவானாக. இவரது பெற்றோர்களுக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக.

மூன்றாவது ஜனாஸா மதிப்பிற்குரிய ஷகீல் அஹ்மது முனீர் சாஹிப் உடையதாகும். இவர்கள் ஆஸ்திரேலியாவின் முன்னால் முபல்லிக் இன்சார்ஜ் ஆக இருந்தார்கள். இப்போது கராச்சியில் வசித்து வந்தார்கள். 31 ஜூலை அன்று தமது 85 –வது வயதில் இவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்களுக்கு திருக்குர்ஆனை மோரி மொழியில் மொழியாக்கம் செய்வதற்கான நல்வாய்பு கிடைத்தது. இந்தியாவில் பீகார் மாநிலத்திலுள்ள முங்கேரைச் சார்ந்தவர்களாக இவர்கள் இருந்தார்கள். இவர்களது தந்தையான ஹகீம் கலீல் அஹ்மது சாஹிப், பீகாரின் ஆரம்ப கால அஹ்மதிகளில் ஒருவராக இருந்தார்கள். இவர்கள் 1906 –ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தார்கள். ஆனால் நேரடியாக அவர்களது கைகளில் இவர்களால் பைஅத் செய்ய முடியவில்லை. இவர்களது தந்தையாருக்கு காதியானில் பத்து வருடங்களாக நாஸிர் தஃலீம் ஆக தொண்டு செய்கின்ற நல்வாய்பு கிடைத்தது. மதிப்பிற்குரிய ஷகீல் முனீர் சாஹிப் அவர்கள் ஆரம்பக் கல்வியை காதியானிலுள்ள தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியிலும் பெற்றார்கள். பிறகு டாக்காவில் இருந்து M.Sc. Physics –ற்கான Degree –ஐப் பெற்றார்கள். பிறகு கல்வித் துறையுடன் தொடர்புள்ள பணிகளை இவர்கள் செய்து வந்தார்கள். தான் வேலை செய்து வந்த ஒரு நீண்ட காலகட்டத்தை இவர்கள் மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள நாடுகளில் கழித்தார்கள். இந்த சமயத்தில் அவர்கள் மார்க்கத்திற்கும் தொண்டு புரிந்து வந்தார்கள். நைஜீரியாவிலுள்ள Federal Ministry of Education –ல் உயர் கல்வி அதிகாரியாக இவர்கள் பணியாற்றினார்கள். நைஜீரியாவின் வாரியிலுள்ள அஹ்மதிய்யா மிஷனின் மேற்குப் பகுதிகளிலுள்ள பிரதேசங்களுக்கு இவர்கள் எட்டு வருடங்கள் வரை மண்டல சத்ர் ஆக அவர்கள் இருந்து வந்தார்கள். இவர்களும் இவர்களது மனைவியும் ‘வா’ என்ற இடத்தில் நுஸ்ரத் ஜஹான் அகாடமியை தொடங்கி வைத்தார்கள். நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் முதன் முதலாக துவங்கப்பட்ட கல்வித் துறையாக அது இருந்தது. அவர்களுக்கு தப்லீக் செய்வதிலும் மிகுந்த ஆர்வம் இருந்தது. நைஜீரியாவில் இரண்டு மிகப்பெரிய வெற்றிகரமான சர்வ சமய Symphoziam –களை அவர்கள் நடத்தினார்கள். ஆப்பிரிக்காவில் தங்கியிருந்த நாட்களில் அவர்கள் இஸ்லாம் மற்றும் கிறித்தவம் தொடர்பாக பல நூல்களை எழுதினார்கள். இவர்கள் Islam in Spain, Shroud and other Discoveries about Jesus, The Reform, Taaleemul Islam Course Book போன்ற நூல்களை இவர்கள் எழுதியுள்ளார்கள். நைஜீரியாவில் தமது செலவில் ஒரு மிஷன் ஹவுஸைக் கட்டியிருந்தார்கள்.

ஒரு ஆன்மீகக் கனவின் அடிப்படையில் சுயமே தம்மைத் தாமே ஜமாஅத்திற்காக அர்ப்பணித்து விட்டார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், இவர்களை ஆஸ்திரேலியாவின் முதல் அமீராகவும் முபல்லிக் இன்சார்ஜாகவும் நியமித்தார்கள். 1985 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 –ம் தேதி இவர்கள் ஆஸ்திரேலியா சென்றார்கள். ஆப்பிரிக்காவில் விசா பெறுவதில் இவர்களுக்கு கடினமான நிலை இருந்தது வந்தது. முஸ்லிமாக இருக்கின்ற முரப்பிக்கு அவர்கள் விசா கொடுப்பதில்லை. எவ்வாறிருப்பினும் அங்கு டாக்டர் இஃஜாஜுல் ஹக் சாஹிப் அவர்களது முயற்சியினால் விசாவும் இவர்களுக்கு கிடைத்தது. இவ்வாறு அவர்கள் தமது பணியைத் தொடர்ந்து செய்ய ஆரம்பித்தார்கள். ஆஸ்திரேலியாவிலுள்ள ‘மஸ்ஜிது பைத்துல் ஹுதா’ மிகவும் அழகான பள்ளிவாசல் ஆகும். அதன் கட்டுமானப் பணிகளில் இவர்களது உதவியும் அதிகமாக இருந்து வந்தது.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்குக் கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. அவர் அதனிடத்துத் தமது முழுக் கவனத்தையும் செலுத்துகிறார். எனவே நீங்கள் நல்லவற்றில் ஒருவரையொருவர் முந்திக்கொள்ள முயலுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும், அல்லாஹ் உங்களை ஒன்று சேர்ப்பான்...... (2:149)*


**மர்ஹூம் முஹம்மது யூசுஃப்**
மற்றும் குடும்பத்தினர், உடன்குடி.

**ALIF AUTO CARE**
Pudupet, Chennai.
Ph: 98847 74525

**CITY HARDWARE STORE'S**
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

**O.A.N. DOORS & STEELS**



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

**ரஹ்மானியா**
**மேல்நிலைப் பள்ளி**
**தொடக்கப் பள்ளி**
**மெட்ரிகுலேஷன் பள்ளி**
மேலப்பாளையம், திருநெல்வேலி.
**S.S. அஸன் அபூபக்கர்**
✆ 94869 37769

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

நபி இறைவனின் வடிவத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக இருக்கின்றார். இந்த கண்ணாடியின் மூலமாக இறைவனின் முகம் தென்படுகின்றது.

**மர்ஹூம் A.N.A. ஹா:.பிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத்தைக் கொடுங்கள். நீங்கள் உங்களுக்காக முன் கூட்டியே அனுப்பும் நன்மையையே நீங்கள் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் செயல்களைப் பார்ப்பவனாவான். (2:111)

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

ஓரிறைக் கொள்கை ஓர் ஒளியாகும். அது அகத்திலும் புறத்திலும் உள்ள பொய்க் கடவுள்களை மறுப்பதன் பின் உள்ளத்தில் உருவாகிறது. பின்னர் அது மனித உடலின் ஒவ்வொரு அணுவிலும் பரவி விடுகிறது. எனவே இதனை அல்லாஹ் மற்றும் அவனின் தூதர் மூலமேயன்றி மனித ஆற்றல்களால் எவ்வாறு பெற முடியும்?

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

இவ்வுலக வாழ்க்கையிலும், சாட்சிகள் எழுந்து நிற்கும் நாளிலும் நிச்சயமாக நாம் தூதர்களுக்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் உதவி செய்வோம். (40:52)

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

Q4Q

**Bamboo Village**
MULTI CUISINE RESTAURANT

Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

**திருக்குர்ஆனிலிருந்து...**

எங்கள் இறைவன் அல்லாஹ் எனக் கூறி, இக்கொள்கையில் நிலைத்திருப்பவர் -களிடம், நீங்கள் அஞ்சவும் வேண்டாம்; கவலையடையவும் வேண்டாம். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று (கூறியவாறு) வானவர்கள் இறங்குவர். (41:31)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின் -றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர் -களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.

**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237

***METAPLAST***
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP

# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

முஸ்லிம், கிறித்தவர், இந்து, ஆரியர் ஆகிய எல்லாருக்கும் நான் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். உலகில் எவரும் எனக்குப் பகைவர் இல்லை. பாசமிக்க தாய் ஒருத்தி தன் குழந்தைகளை நேசிப்பதை விட மிகுதியாக மனிதயினத்தை நான் நேசிக்கிறேன்....

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com

**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE



**276, N.H. Road, Coimbatore - 641 001.**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

வானத்தில் இறைவன் உங்கள் மீது திருப்தி கொள்ள வேண்டுமென்று எண்ணினால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றில் பிறந்த இரு சகோதரர்களைப் போல் ஆகிவிடுங்கள்.

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**M. Abdul Raoof**
✆ +91 9362 2272 29

**SUCCESS INDIA**
PROMOTERS

Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 7 September 2017 Issue No. 36

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(10-வது பக்கத்தின் தொடர்ச்சி…)*

**30** செப்டம்பர் **1983** –ல் இந்தப் பள்ளிவாசலுக்கான அடிக்கல்லை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தமது கைகளால் நட்டினார்கள். பொருளாதார நிலைமை அப்போது நன்றாக இல்லாமல் இருந்தும் மிகவும் உழைத்தவாறு வகாரே அமல் மூலமாக இவர்கள் பல பணிகளைச் செய்தார்கள். சுயமே அவர்களும் வகாரே அமல் செய்து வந்தார்கள். பணி செய்து கொண்டிருந்த சமயத்தில் ஒருமுறை இவர்கள் மாடிப் படிகளிலிருந்து கீழே விழுந்து விட்டார்கள். அதனால் இவர்களது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. பிறகும் இவர்கள் பள்ளிவாசல் கட்டுகின்ற பணியைத் தொடர்ந்து செய்து வந்தார்கள். இதன் காரணமாக மிகவும் அழகான பெரிய பள்ளிவாசல் அங்கு உருவானது. எங்கெல்லாம் இவர்கள் சென்றார்களோ அங்கு ஜமாஅத்திற்கு இடம் இல்லாமல் இருந்த நிலையில் ஜமாஅத் ஒரு Shed இருக்கின்ற இடத்தில் நிலத்தை வாங்கி இருந்தது. அந்த Shed –ல் கணவன், மனைவி இருவரும் தொழுகைகளை நிறைவேற்றி வந்தனர். ஒரு பகுதியில் தொழுகை நடந்தது. இன்னொரு பகுதியில் Tin –ஆல் கூரை அமைத்து அல்லது துணியால் ஒரு கூரையை அமைத்து அந்த இடத்தில் அவர்கள் வாழ்ந்தனர். இவ்வகையில் அங்கு இவர்கள் பெரும் தியாகத்தை செய்தார்கள். **1991** –ல் இவர்கள் மீண்டும் நைஜீரியாவில் நியமிக்கப்பட்டார்கள். அங்கு ஜாமிஆ அஹ்மதிய்யாவின் பிரின்ஸ்பல் ஆக இவர்கள் தொண்டு புரிந்து வந்தார்கள். **1989** –ல் அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்டு நூறு ஆண்டுகள் ஆனதையொட்டி அதன் நூற்றாண்டு விழாவைக் கொண்டடிய போது திருக்குர்ஆனின் தேர்ந்தெடுக்கப்பட்ட வசனங்களை உலகிலுள்ள நூறு மொழிகளில் மொழியாக்கம் செய்கின்ற திட்டத்தை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அறிவித்தார்கள். ஆஸ்திரேலியாவின் பொறுப்பில் மோரி மொழியில் திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்கின்ற பணி ஒப்படைக்கப்பட்டது. அப்போது மொழியாக்கத்தின் தரம் எவ்வாறு இருக்கின்றது என்று பார்த்தபோது அது நன்றாக இருக்கவில்லை. இன்னும் சொல்வதென்றால் பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம் என்பதன் மொழியாக்கத்தை எவர் மூலமாக மோரி மொழியில் செய்தனரோ அந்த நபர் அதற்கு In the Name of Jesus என்று மொழியாக்கம் செய்திருந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் இவர்கள் சுயமே இந்த மொழியாக்கம் சரியல்ல என்று கூறினார்கள். பிறகு இவர்களே தமது முதிய வயதில் அந்த மொழியைக் கற்று அந்த மொழியாக்கத்தை இவர்கள் முழுமையாக செய்து முடித்தார்கள்.

**2013** –ல் நான் நியூசிலாந்து சென்றபோது அங்கு திருக்குர்ஆன், மோரி மொழியில் மொழியாக்கம் முழுவதுமாக செய்யப்பட்டு மோரி மொழி தெரிந்த மக்களுக்கு திருக்குர்ஆன் வழங்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியிலும் அவர்கள் கலந்து கொண்டார்கள். மிகவும் பணிவுள்ள மனிதாரகவும் அவர்கள் இருந்தார்கள். எவ்வகையிலும் பெருமைப்படுகின்ற உணர்வு இவர்களிடம் இருந்ததில்லை. நான் திருக்குர்ஆனை மொழிபெயர்த்துள்ளேன். எனவே எனக்கு மிகப் பெரிய அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற உணர்வு அவர்களிடம் இருந்ததில்லை. உலகை இவர்கள் பெருமளவில் சம்பாதித்தார்கள். ஆனால், எந்த அலவன்ஸும் பெறாமல் இவர்கள் பிரச்சாரகராக பணிபுரிந்து வந்தார்கள்.

அல்லாஹ் இவர்களை கருணையில் ஆழ்த்துவானாக. இவர்களது தகுதிகளை உயர்த்துவானாக. இவர்களது மனைவிக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக. வருங்காலத்திலும் அல்லாஹ் நமக்கு தியாகம் செய்கின்ற அத்தகைய பிரச்சாரகர்களை நமக்கு வழங்குவானாக. அவர்கள் எல்லா வகையிலும் தன்னலம் பாராமல் பணி செய்யக் கூடியவர்களாகவும் பணிவுள்ளவர்களாகவும் இருப்பார்களாக.

★ ★ ★ ★ ★

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

மொழியாக்கம்: எனது அடையாளங்களில் இதுவும் ஒன்றாகும். அதாவது எல்லாவற்றையும் நன்கு அறிந்திருக்கின்ற ஞானமிக்க இறைவன் பழித்துரைக்கின்ற ஒரு நபர் தொடர்பாகவும், அவர் சுமத்துகின்ற மாபெரும் அவதூறு தொடர்பாகவும் எனக்கு தெரிவித்துள்ளான். எனக்கு தனது வஹீயின் மூலம் அவன் தகவல் தெரிவித்தான். அதாவது இந்த நபர் எனது கண்ணியத்தை அகற்றுவதற்காக என் மீது தாக்குதல் நடத்துவார். இறுதியில் அவரே எனது இலக்காக ஆகி விடுவார். இறைவன் மூன்று கனவுகளில் இந்த உண்மையை எனக்கு வெளிப்படுத்தினான். இந்த எதிரி தனது வெற்றிக்காக உதவுகின்ற மூவரை நியமிப்பான். அதன் மூலம் எப்படியாவது என்னை இழிவுபடுத்தி எனக்கு துக்கத்தைத் தர அவன் முயற்சி செய்வான். எனக்கு கனவில், நான் ஒரு நீதிமன்றத்தில் கைதிகளைப்போன்று கொண்டு வரப்பட்டிருந்தது காட்டப்பட்டது. இந்த நிலைமைகளின் முடிவு எனது இரட்சிப்பாகும் என்று எனக்கு காட்டப்பட்டது. அது சிறிது காலம் கழிந்த பிறகு வெளிப்பட்டாலும் சரியே. இந்த இழிவான பொய்யான எதிரியின் மீது வர இருந்த துன்பம் அகற்றப்பட்டு விடும் என்ற எனக்கு நற்செய்தி தரப்பட்டிருக்கின்றது.

எனவே, இந்த எல்லா கனவுகளையும் இறை அறிவிப்புகளையும் (அவை நிறைவேறும்) நேரத்திற்கு முன்னதாகவே நான் வெளிப்பட்டிருந்தேன். எந்தப் பத்திரிகைகளில் அவற்றை வெளியிட்டு இருந்தேனோ அவற்றில் ஒன்றின் பெயர் ‘அல் ஹகம்’ ஆகும். மற்றொன்றின் பெயர் ‘அல் பத்ர்’ ஆகும். பிறகு முன்னறிவிப்பில் கூறப்பட்டுள்ள இந்த விஷயங்கள் எப்போது வெளிப்படும் என்று நான் காத்துக் கொண்டிருந்தேன். ஒரு வருடம் கழிந்ததும் விதிக்கப்பட்டிருந்த இந்த விஷயங்கள் கரம்தீனின் கைகளால் வெளிப்பட்டன. (அதாவது அவன் உண்மைக்கு மாற்றமாக என் மீது இராணுவ நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடர்ந்திருந்தான்)

எனவே, இந்த வழக்குகளை அவன் தொடர்ந்ததன் மூலமாக முன்னறிவிப்பின் ஒரு பகுதி நிறைவேறி விட்டது. எஞ்சியிருந்த பகுதி அதாவது எனக்கு அவனது வழக்குகளிலிருந்து இரட்சிப்பு கிடைப்பது, மேலும் இறுதியில் அவனே தண்டனைக்கு ஆளாவது ஆகிய இவையும் கூட விரைவில் நிறைவேறி விடும். சொற்றொடரின் இந்த பகுதியிலிருந்து இந்த நூல் வெளியிடப்பட்ட நேரம் வரை எனக்கு கரம்தீனின் வழக்குகளிலிருந்து இரட்சிப்பும் விடுதலையும் கிடைக்கவில்லை என்பதும் அவன் தண்டனைக்கு ஆளாகவில்லை என்பதும் தெரிய வருகின்றது. இவை எல்லாமே முன்னறிவிப்பாகவே எழுதப்பட்டிருந்தது.

மேலே அரபியில் எழுதப்பட்டுள்ள அந்த முன்னறிவிப்பின் மொழியாக்கம் இதுவாகும்: அதாவது கரம்தீன் எனக்கு தண்டனை பெற்றுத் தர வேண்டும் என்பதற்காக இராணுவ நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடுப்பான். உதவி செய்கின்ற பலரும் அவனுக்கு உதவி செய்வர். இறுதியில் அவனே தண்டனைக்கு ஆளாவான். மேலும், இறைவன் அவனது தீங்கிலிருந்து எனக்கு இரட்சிப்பை வழங்குவான் என்று அந்த முன்னறிவிப்பில் என்னிடம் கூறப்பட்டிருந்தது. அவ்வாறே நிகழ்ந்தது. இந்த முன்னறிவிப்பு எந்த அளவு மறைவான செய்திகளைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது என்று இப்போது சிந்திக்க வேண்டும். எனது கண்ணியம் மற்றும் எதிரியின் இழிவு பற்றி கட்டளை இடுகின்ற இத்தகைய முன்னறிவிப்பைச் செய்வது ஒரு மனிதனின் அல்லது ஷய்த்தானின் பணியாக இருக்க முடியுமா ?

*(ஹகீகத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 223-226)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad